www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

# பாப்பரசர் வருகையுடனாவது 'பாதை' திறக்குமா?

இந் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவருவதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதும் உடனடித் தேவையாக முன்னாலுள்ளது. சமாதானத்தை நோக்கிய பயணத்தில் தற்போது இரண்டு முக்கிய விடயங்கள் பரவலாகப் பேசப்படுகின்றது.

1. யாழ்குடாநாட்டு மக்கள் சிரமமின்றி பிரயாணம் செய்வதற்கான பாதை.

2. யுத்த நிறுத்தம்.

ஆனையிறவைத் திறப்பதற்கு அரசு தயாராக இருப்பதாக அறிவித்தாலும் புலிகள் சங்குப்பிட்டி-பூநகரிப் பாதையைத்தான் விரும்புகிறார்கள். இந்தப்பாதைப் பிரச்சினை, ஏறினால் எருதுக்குக் கோபம் இறங்கினால் முடவனுக்குக் கோபம் என்றமாதிரிக் கிடந்து இழுபடுகிறது.

ஆனையிறவு திறக்கப்பட்டால் சிவிலியன் போக்குவரத்தை கவசமாக்கிக்கொண்டு இராணுவம் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் உள்நுழையலாம் என புலிகள் அஞ்சுகின்றனர்.

பூநகரிப் பாதை திறக்கப்பட்டால் தமது படைத்தளத்திற்கு ஆபத்தாகிவிடும் என்று இராணுவம் நினைக்கிறது.

ஆனால் யாரும் மக்கள் படும்பாட்டை நினைக்கவில்லை என்பதுதான் வேதனையான விடயம். நான்கு வருடங்களாக கிளாலிக் கடல்பயணமும் தாண்டிக்குளம் வரையிலான கெடுபிடி நிறைந்த பயணமும் மக்களைக் களைக்கவைத்து விட்டது.

பாதைப் பிரச்சினை இன்று குடாநாட்டு மக்களை வெளியுலகத் தொடர்பிலிருந்து அன்னியப்படுத்தி உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் அவர்களை மிகவும் நலிவடையச் செய்துள்ளது. உண்மையில் தாம் ஒரு மூடப்பட்ட பகுதியில் வாழும் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தி உள்ளது.

ஜனவரி 20ம் திகதி பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கொழும்பு வருகிறார். யாழ் குடாநாட்டின் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் தாம் பாப்பரசரைத் தரிசிக்க முடியுமா என்பதில் சந்தேக நிலையே நிலவுகிறது. பாப்பரசரின் வருகையோடாவது பாதை திறக்காதா என முழுக் குடாநாட்டு மக்களும் அங்கலாய்க்கின்றனர்.

ஆனால் யுத்த சக்திகள் மக்களின் இந்த அபிலாசைகளுக்கப்பால்தான் சிந்திக்கின்றனர். அடுத்தது யுத்த நிறுத்த முயற்சிகள். அரசுக்கும் புலிகளுக்குமிடையே 8 கடிதங்கள் பரிமாறப்பட்டு விட்டதாக அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார். ஆனால் யுத்தமிடும் சக்திகள் இன்னும் பரஸ்பரம் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது ஒரு யுத்த நிறுத்தத்திற்கோ வந்தபாடில்லை.

மக்கள் சமாதானத்திற்கான தமது வேட்கையை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெளிவாகத் தெரிவித்ததன் பின்னர் நாட்டின் பெரும்பாலான சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன.

நிலைமை இப்படியே தொடருமானால் நாடு மீண்டும் பாரிய யுத்த நெருக்கடிக்குள் சிக்கிவிடும்.. சமாதானம் கானல் நீராகிவிடும். எனவே சம்பந்தப்பட்ட சக்திகள் பொறுப்புணர்ச்சியுடன் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

யுத்தநிறுத்தம் போரிடும் இருதரப்புக்களுக்கு மாத்திரமல்ல. அனைத்து மக்கள், அனைத்து ஜனநாயக சக்திகள், மனித உரிமைச் சக்திகளும் இதனை நிஜத்தில் எதிர்பார்க்கின்றன.

கடந்த காலங்களில் யுத்த நிறுத்த காலத்தில் எதத்தகைய சம்பவங்கள் நடைபெற்றன என்பதைன எவரும் இலகுவில் மறந்திருக்க முடியாது.

எனவே யுத்த நிறுத்தம் என்பது இதய சுத்தியுடன் உணர்வுபூர்வமான பரந்த எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

புத்தாண்டின் முதற்பகுதி, பாதை திறந்ததாக.....யுத்தம் நிறுத்தப்பட்டதாக மலரட்டும்.

நல்வாழ்த்துக்கள்




மேதகு வணக்கத்துக்குரிய பிதா மார்க்கஸ் பெர்னாண்டோ
ஆர்ச் பிஷப்,
பிஷப் இல்லம்,
கொழும்பு.

## புனித பாப்பரசரைத் தரிசிக்க யாழ் மக்களுக்கு உள்ள தடைகளை நீக்குக

உலகின் மிகப்பெரும் ஆன்மீகத் தலைவரும் சமாதானத் தூதுவருமாகிய புனித பாப்பரசர் அவர்களின் இலங்கை வரவை முன்னிட்டு அவரைத் தரிசிக்கவும், அவரது நல்லாசிகளைப் பெறவும், அயல்நாடுகளிலிருந்தும் இலங்கையின் ஏனைய பாகங்களிலிருந்தும் பக்தர்களும் மக்களும் கொழும்புக்கு வருகைதர இருக்கிறார்கள்.

இப்புனிதத் தலைவரைத் தரிசிப்பதற்கும், அவரது ஆசிகளைப் பெறுவதற்கும் வட இலங்கை மக்கள் - குறிப்பாக யாழ் பகுதி மக்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

புனித பாப்பரசர் அவர்களைத் தரிசிப்பதற்கு வரவிரும்பும் யாழ் மக்களின் பாதுகாப்பான பயணத்திற்கு வசதியாக ஆனையிறவு தரைப்பாதையைத் திறப்பதற்கு அரசு நல்லெண்ணத்துடன் முயற்சிகளை எடுத்து வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மாறாக, பயணத்திற்குச் சிரமமும் ஆபத்தும் ஏற்படுத்தும் வேறு பாதைகளைத் திறப்பது பற்றிக் கூறி, நியாயபூர்வமற்ற வகையில் தட்டிக் கழித்து வருகின்றனர்.

மேலும் யாழ் மக்களைப் பொறுத்தவரை, பெரும்பாலான இந்துக்கள் மதவேற்றுமையின்றி பிரசித்தி பெற்ற தேவாலயங்களுக்கு தரிசனத்திற்கு செல்வது வழக்கம். யாழ் புனித அந்தோனியார் தேவாலயம், புனித மரியாள் தேவாலயம், மடு மாதா தேவாலயம் போன்றவற்றின் திருவிழாக்களில் பெருமளவு இந்துக்களும் கலந்துகொள்வது யாவரும் அறிந்ததே.

எனவே, இன்று கடினமான நெருக்கடிகளுக்குள்ளும் துன்பச் சுமையிலும் வாழும் பெரும் பான்மையான தமிழ் மக்கள் புனித பாப்பரசரைத் தரிசிக்கவும், அவரது ஆசிகளைப் பெறவும் ஆவலாயிருப்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் தடையுத்தரவுகளும், அனுமதிப்பத்திர முறைகளும் புனிதரைத் தரிசிக்க விரும்பும் மக்களுக்குப் பெரும் தடையாக இருந்து வருகிறது.

எனவே, யாழ் மாவட்ட மக்கள் புனிதத் தலைவரைத் தரிசிக்க பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளக்கூடிய ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிடுவதற்கும், புனிதரைத் தரிசிக்க ஆவலுடன் இருக்கும் சகல மக்களையும் அனுமதிக்குமாறும், தங்கள் செல்வாக்கையும் உயர் தகுதியினையும் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

K. PREMACHANDRAN
Secretary General
ELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT
(E P R L F)

EPRLF

www.padippakam.com



# கண்ணோட்டம்

உலகின் அறுபது கோடிக்கு மேற்பட்ட கிறிஸ்தவ மக்களின் ஆன்மீகத் தலைவரான பாப்பரசர் ஜனவரி மாதம் 20ம் திகதி இலங்கை மக்களின் தரிசனத்திற்காக இங்கு வருகை தர இருக்கிறார். அவரைத் தரிசிப்பதற்காக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அயல் நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொழும்புக்கு வர தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை பாப்பரசர் என்பவர் கடவுளின் தூதுவராக கருதப்படுபவர். உலக மக்கள் அவரை ஒரு ச்மாதான தூதுவராக காண்கின்றனர். உலகின் கிறிஸ்தவ சமுதாயத்தைப் பொறுத்தவரை அவரை தரிசிப்பதென்பது அவர்களது வாழ்க்கையின் மிகப் பெரும் பாக்கியமாக கருதப்படுகின்றது.

ஆனால் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் எமது நாட்டு மக்கள் வத்திக்கான் சென்று அவரின் தரிசனத்தைப் பெறுவதென்பது வெறும் கனவாகவே இருக்கும். எனவேதான் பாப்பரசரின் விஜயம் என்பது அந்தந்த நாட்டு கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியாகி விடுகின்றது. அந்த வகையில் பாப்பரசரின் இலங்கை விஜயம் என்பதும் இந்நாட்டின் லட்சக்கணக்கான கிறிஸ்தவ மக்களுக்கு அவர்களது வாழ்வில் கிடைத்ததற்கரிய ஓர் அரிய சந்தற்பமாகும்.

இலங்கையின் வட மாகாணத்தில் சிறிஸ்தவ மக்கள் கணிசமாக வாழ்கின்றனர். இவர்களில் மிகப் பெரும்பான்மையினரும் ஏனைய மதத்தை சார்ந்தவர்களும் கூட பாப்பரசரை தரிசிக்க விரும்புவது இயல்பானதே. இன்று நடக்கும் யுத்தத்தைக் காரணம் காட்டி வடமாகாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இச் சந்தர்ப்பம் மறுக்கப்படுவதானது மனிதாபிமானம் அற்ற நாகரீகம் அற்ற ஒரு செயலாகும். இம்மக்களின் மென்மையான ஆன்மீக உணர்வுகளை புண்படுத்துவதென்பதும், அவர்களின் ஆன்மீக தலைவரை தரிசிப்பதற்கு கட்டுப்பாடு விதிப்பதென்பதும் மக்கள் மத்தியில் குரோத உணர்வுகளையே ஏற்படுத்தும். மக்களுக்காக போராடுவதாக கூறுபவர்கள் மக்களின் மன உணர்வுகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அவர்கள் கொழும்பு ஆர்ச் பிஷப் அவர்களிடம், வடமாகாணத்தில் இருக்கக்கூடிய மக்கள் எந்தவித தடையும் இன்றி சுயமாகவே வந்து பாப்பரசரை தரிசிக்கவும், அவரது ஆசியினைப் பெறவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்றுமாறு கோரி இருந்தார். அதுமாத்திரமல்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக வந்து போவதற்கேற்ற ஓர் பாதையும் திறக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாகவும் அரசாங்கமும் மத குருமார்களும் புலிகளுடன் பேசி வருவதாக அறியப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட மக்களை மாத்திரமே கொழும்புக்கு வர புலிகள் அனுமதிப்பர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. மக்களின் மத உணர்வுகளை அலட்சியப்படுத்தி இத்தனை பேரைத்தான் விடுவேன் என கட்டுப்பாடு விதிப்பதும், பெரும்பான்மை மக்களுக்கு தடைவிதிப்பதென்பதும், வருவோரிடம் பணம் அறவிடுவோம் என்பதும், போவோர் திரும்பி வரும்வரையில் பணயமாக ஆள் வைத்துவிட்டுப் போகக் கேட்பதும் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பது மாத்திரம் அல்லாமல், அவர்களது உணர்வுகளையும் அவமதிக்கும் ஒரு செயலாகும்.

மக்களின் மகத்தான ஆதரவுடன்தான் நாம் இயங்கிவருகின்றோம் என மார்தட்டுபவர்கள் மக்களின் போக்குவரத்துக்கு ஏன் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும்? அவர்கள் திரும்பி வரமாட்டார்கள் என ஏன் அஞ்ச வேண்டும்? உண்மையில் தம்மையும் தமது கொள்கைகளையும், தமது நடவடிக்கைகளையும் மக்கள் ஏற்றுக்கொள்வதாக இவர்கள் கருதினால் இப்படியான கட்டுப்பாடுகள் எதுவுமே தேவையற்றனவாகும்.

எனவே பாப்பரசரை தரிசிக்க விரும்பும் அனைத்து மக்களுக்கும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அனுமதி அளிக்க வேண்டும் என்பதுடன், இது தொடர்பான புலிகளின் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் அகற்றப்பட வேண்டும் எனவும் விரும்புகின்றோம். மக்கள் பாப்பரசரைத் தரிசிக்க வரும் ஏற்பாட்டைச் செய்வதில் ஈடுபட்டிருக்கும் மத பீடத்திற்கும் கிறிஸ்தவ சமூகத்திற்கும் ஆதரவாக அனைத்து மக்களும் செயற்பட வேண்டும் எனக் கோருவதுடன் மொழி, மத வேறுபாடின்றி அனைவரும் இது தொடர்பாக புலிகளுக்கு வலியுறுத்த வேண்டும் எனவும் கோருகின்றோம்.

---

இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமாதானத்துக்கான தமது நிலைப்பாட்டை முன்வைக்கும் நிலையில் விடுதலைப் புலிகளும் தமது நிலைப்பாட்டை தெளிவாக அரசாங்கத்தின் முன்னரும் மக்களின் முன்னரும் வைக்கவேண்டிய கடப்பாட்டையும் அழுத்தி உரைக்க விரும்புகின்றோம்.

நீண்டகாலமாக பேச்சுவார்த்தை என்ற பெயரில் 'கூடிக்குழப்பும்' கசப்பான அனுபவங்களையே கண்டு வந்துள்ளோம். இந்த நிலைமையில் அரசாங்கம் புலிகள் மீதும், புலிகள் அரசாங்கத்தின் மீதும் குறைகளை அள்ளி வீசி குட்டையைக் குழப்ப முனையக்கூடாது.

பேச்சுவார்த்தையை குழப்புவது சுலபமான விடயம். மக்கள் அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகின்றார்கள். போரினாலும் அழிவினாலும் அடக்குமுறைகளினாலும் மனமுடைந்த நிலையில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய சூழலில் அரசாங்கம் எந்த அளவு நல்ல மனதுடன் முயன்றாலும் தீர்வைக் கொண்டுவர முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளும் இன்றைய அரசியல் யதார்த்தங்களை உணர்ந்து உண்மையான சமாதானப் பாதையாயின் அதனை உதாசீனம் செய்யாது பொறுப்புணர்வுடன் தமது நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதையும் அழுத்தி உரைக்கின்றோம்.

நீண்டகாலமாக இந்த நாட்டு மக்கள் சந்தேகங்கள், ஏமாற்றங்களின் மத்தியிலேயே காலத்தை கடத்தியுள்ளார்கள். தீர்வுக்கும் அமைதிக்கும் கிடைத்த சந்தர்ப்பங்களை வெறும் சந்தேகங்களினாலேயே குழம்பிப் போயுள்ளன. மீண்டும் உறுதியோடு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ச்மாதானத்தை ஏற்படுத்தும் சகல வாய்ப்புக்களையும் நழுவவிடாது பயன்படுத்த முன்வர வேண்டும்.

பழையபடி வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது என்ற கதை தொடரக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.


-வீரகேசரி (22.12.94) ஆசிரியர் தலையங்கத்தில்.

---

# தமிழாராய்ச்சி(?)மாநாடு

தை முதல் திகதி முதல் 5ம் திகதி வரை தமிழகத்தின் தஞ்சையில் நடைபெறவிருக்கும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இலங்கைத் தமிழறிஞர்கள், ஆர்வலர்களுக்கு அழைப்பில்லை என்பது தமிழ் கூறும் நல்லுலகை வேதனையுறச் செய்யும் ஒரு செய்தியாகும்.

1966இல் கோலாலம்பூரில் முதல் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்டவர் தனிநாயகம் அடிகளார். தொடர்ந்து வந்த 7 தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் இலங்கைத் தமிழறிஞர்கள் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை நல்கியிருக்கிறார்கள்.




4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெற்ற போது யாழ் நகரம் விழாக்கோலம் பூண்டது. தமிழின் பாரம்பரியப் பன்முக வளர்ச்சிபற்றி சிலவருடங்களுக்கொருமுறை ஆராயும் இந்த மாநாட்டிற்கென்றே ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு ஆக்கங்களை வருடக்கணக்கில் தாயாரிப்பார்கள்.

இலங்கையிலிருந்து இம்முறை 200க்கு மேற்பட்ட தமிழ், சிங்கள அறிஞர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் ஒருசிலரைத் தவிர மிகப் பெரும்பான்மையினருக்கு அனுமதி கிடைக்கவில்லை. இது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளிக்கும் செய்தியாகும்.

வழமையில் உலகத் தமிழாராய்ச்சி மன்றமே ஒழுங்குகளை மேற்கொள்ளும். ஆனால் இம்முறை வேறு சில தலையீடுகளும் இருக்கலாம்போல் தெரிகிறது.

தமிழகத்தின் அறிஞரான வா.உ.சேதுராமன் இலங்கைத் தமிழறிஞர்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டதற்கெதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் 'வழக்குத் தொடர்ந்திருந்தார். அதுவும் தள்ளுபடியாயிற்று.

இலங்கையிலிருந்து தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் செல்வதற்கான தயாரிப்புக்கள் போக்குவரத்து ஒழுங்குகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டதன் பின், இத்தகைய புறக்கணிப்பினால் தமிழறிஞர்கள் தங்கள் வேதனையையும் விசனத்தையும் தெரிவித்துள்ளனர்.

எனவே, மாநாட்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பதற்காகவும், விஸ்தாரமான அளவில் பல்முனை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகவும் கொழும்பில் மாநாடொன்றை நடாத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

இலங்கைத் தமிழறிஞர்களுக்கு கதவடைப்புச் செய்ததன்மூலம் தஞ்சை மாநாடு உலகத் தமிழாராய்ச்சி மாநாடென்ற அர்த்தத்தை இழந்து விட்டதாகவே பலரும் கருதுகின்றனர்.

---

இலங்கை மக்களின் கலாச்சாரங்களையும்மொழிகளையும் மேம்படுத்தி வளர்ப்பதில் இலங்கை அரசாங்கம் ஆழமான பற்றுறுதியைக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் மொழி மற்றும் கலாச்சார தனித்துவங்களைப் பேணிக்காத்து மேம்படுத்துவதற்கு சகலவிதமான உற்சாகத்தையும் ஆதரவையும் அரசாங்கம் தொடர்ந்து வழங்கும். இலங்கையின் தாராள சமூகத்தில் மக்களிடையே பிணைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும்.

-தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு விடுத்திருக்கும் விசேட செய்தியில் சந்திரிகா

---

"அதிகமான உரிமைகளையும் சலுகைகளையும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கொடுத்துவிடும் என சிங்கள மக்களும், தமது இன கௌரவத்தை பாதிக்கக்கூடிய விடயங்களையே அரசாங்கம் வழங்குவதாகக் கூறி ஏமாற்றிவிடும் என தமிழ் மக்களும் கருதுகின்றார்கள்.... இன பேதமற்ற சம வாய்ப்புக்களை அளிக்கும் முறைமைகளை உருவாக்குவதே எமது நோக்கம்"

-'டைம்' சஞ்சிகைப் பேட்டியில் சந்திரிகா

---

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்பவேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

| | | | |
|---|---|---|---|
| 29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-2398 | 52, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. | 22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-2070 | மன்னார் ☎ 023-2370 |

வெளிநாட்டு முகவரிகள்:

| | | |
|---|---|---|
| Post Bag: 1041, Madras-17, India. | B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K. | P.Fach: 100206, 44002 Dortmund, Germany. |
| | P.Box: 6800, Agincourt. Ont-MIS3C6, Canada. | P.Fach: 506, Bern-17, Switzerland. |

படிப்பகம்
EPIC
BOX 95

www.padippakam.com





# ஆற்றல்மிகு தோழர்களே!

அன்பிற்கினிய தோழர்களுக்கு,

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட சமாதானமானது எட்டாக்கனியாக ஆகி விடுமோ என்ற அச்சநிலை தோன்றி வருகின்றது. பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிந்தவுடன் மிகவும் உற்சாகமாக தொடங்கப்பட்ட புலிகள்–அரசு பேச்சுவார்த்தை ஒரு சுற்றுடன் நின்றுவிட்டது.

காமினி திசாநாயக்கா கொலையும், அதனைத் தொடர்ந்து அரசின் மீது ஏற்படுத்தப்பட்ட நிர்ப்பந்தமும், அரசை நிதானித்துச் செல்லத்தூண்டியுள்ளன. யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துவரும் பத்திரிகைகளும், புலிகளின் குரல் வானொலிச் செய்திகளும், மறைமுகமாக புலிகள் இதற்கு உ... மை கோருவதையே உணர்த்துகின்றன. இதுவே அரசின் நிதானத்துக்கு காரணமாகத் தோன்றுகின்றது.

ஆனால் அதேசமயம் பேச்சுவார்த்தை நடத்தாமல் நீண்டகால தாமதங்களை ஏற்படுத்துவதும் இன்னும் ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும் என்பதை அரச தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

நத்தாருக்கு முதல் நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பேச்சுவார்த்தை இப்பொழுது நத்தாருக்குப் பிறகெனப் பின்போடப்பட்டுள்ளது. இன்னும் எவ்வளவு காலத்திற்கு இது பின்தள்ளப்படுமோ புரியவில்லை.

நாட்டின் முழு மக்களும் அது சிங்கள, தமிழ், முஸ்லீம் என்ற வேறுபாடின்றி சகல இன மக்களும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆணையை சந்திரிகா அவர்களுக்கு கொடுத்துள்ளார்கள். எனவே எப்படியான சிரமங்கள் ஏற்பட்ட போதிலும், சமாதானத்திற்கான முயற்சியில் திருமதி சந்திரிகா அவர்கள் பின்வாங்கக் கூடாது என்பதே முழு மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

அதேபோல் தமிழ் மக்களும் கூட தாங்கள் இழக்க வேண்டியதை இழந்து செய்ய வேண்டிய தியாகங்களைச் செய்து, அவர்களால் இயலாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பிள்ளைகளை இழந்த பெற்றார், பெற்றாரை இழந்த பிள்ளைகள் என ஒருபுறமும், தமது சொத்து பத்து, தொழில் என்பவற்றை மாத்திரமல்லாமல் முழு வாழ்க்கையையுமே இழந்துவிட்ட மனிதக் கூட்டம் ஒருபுறமுமாக முழு வடக்கு–கிழக்கு மக்கள் சமாதானத்திற்கு ஏங்குகின்றார்கள் என்பதை புலிகளும் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் எல்லோரும் தமக்கும் தமது நடவடிக்கைகளுக்கும் ஆதரவாக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுவது மிகவும் தவறான ஓர் கணிப்பீடாகும்.

துப்பாக்கிகளுக்கு பயந்து மக்கள் பேசா மடந்தைகளாக இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். ஆனால் அவர்களது பொறுமைக்கும் எல்லை உண்டு. இயலாக்கட்டத்தில் அவர்களும் கேள்வி கேட்கும் நிலை ஏற்படலாம்.

எனவே சமாதானத்தின் தேவையை புலிகள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

பாசமிகு தோழர்களே,

வட–கிழக்கைப் பொறுத்தவரை மக்களுக்கு செய்திகள் சென்றடைவதில்லை, இல்லையேல் மிகவும் காலதாமதமாகவே செய்திகள் அவர்களைச் சென்றடைகின்றன.

புலிகளும் அரசாங்கமும் விரும்பினால் பேசட்டும், விரும்பாவிட்டால் விடட்டும் என்று நாம ஏனோ தானோ என்று இருந்துவிட முடியாது. மக்களின் நலன்களில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் சமாதானம் உருவாக தம்மால் ஆன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முக்கியமாக அரசுக்கும், புலிகளுக்கும் விளங்கும் வண்ணம் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். இதனை மக்களுக்கு கிராமம் கிராமமாகச் சென்று நாம் உணர்த்த வேண்டும்.

சமாதானத்திலும், கௌரவமான அரசியல் தீர்விலும் மக்களுக்கு உள்ள அக்கறையினை அவர்கள் மீண்டும், மீண்டும், தெளிவாக அரசுக்கும் உலகத்துக்கும் வெளிப்படுத்த வேண்டும். அதற்கேற்ப மக்கள் தயார் படுத்தப்பட வேண்டும்.

இது வெறுமனே அரசு–புலிகள் தொடர்பான விடயமல்ல. முழுத் தமிழ் மக்களும் தொடர்பான விடயம் அவர்களது வாழ்க்கை அவர்களது எதிர்காலம் தொடர்பான விடயம்.

**வெறும் சமாதானம் மாத்திரமல்ல, தமிழ் மக்களது நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு வலுவூட்டுவதும் இம் மக்கள் சக்தியே. எனவே இவர்களுள் மறைந்து கிடக்கும் பலத்தை, உத்வேகத்தை இனங்கண்டு அவ்வழியில் அவற்றை நடத்திச்செல்ல தோழர்கள் முயற்சி செய்யவேண்டும். நீதியான அரசியல் தீர்வும், சமாதானமும், கௌரவமான வாழ்வும் முழு மக்களின் முயற்சியிலுமே தங்கியுள்ளது, வெறும் ஆயுதங்களில் மட்டுமல்ல. இதைப் புரிந்துகொள்வதும் மக்களுக்கு புரியவைக்க வேண்டியதும் ஒவ்வொரு தோழரின் கடமையாகும்.**

ஆகவே எமக்கும் முழுத் தமிழ் மக்களுக்கும் இவ்விடயத்தில் ஆழ்ந்த அக்கறை இருக்க வேண்டும். அந்த அக்கறையை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தோழருக்கும் இருக்கின்றது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இளைஞர்கள் போராடுபவர்களாகவும், ஏனையோர் பார்வையாளர்கள் என்ற சூழ்நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகால கட்டத்தில் தமிழ மக்களின நியாயமான கோரிக்கைகளுக்காக சகல மக்களுமே இளைஞர் இயக்கங்களை ஆதரித்து வந்தார்கள்.

ஆனால் போராட்டம் பற்றிய கருத்தைச் சொல்வதற்கு கூட உரிமையற்ற நிலையில் இன்று அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஏதாவது சொன்னால் உடனடியாகவே துரோகி என்றோ, காட்டிக்கொடுப்பவன் என்றோ கொல்லப்படலாம் என மக்கள் அஞ்சுகின்றார்கள்.

இந்நிலையில் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்காக போராடவோ இல்லையேல் தமது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தவோ முடியாமல் மக்கள் அச்சத்துடன் வாழும் நிலையே உள்ளது. ஒருபக்கம் இராணுவம், அதிரடிப்படையெனவும், மறுபுறம் புலிகள் எனவும் மக்கள் எல்லோருக்குமே அஞ்சி நடுங்கியவண்ணமே வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களை இவ்வச்சத்தில் இருந்து விடுவிக்க வேண்டும். இராணுவ அட்டூழியங்களில் இருந்தும் புலிகளின் கோரக் கொலைக்கரங்களில் இருந்தும் இவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

இதற்கான தெளிவை, விளக்கத்தை நாம் மக்களுக்கு கொடுக்க வேண்டும். அவர்களுக்குள் மறைந்திருக்கும் பலத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களின் நியாயபூர்வமான உரிமைகளை அவர்களுக்கு விளங்க வைக்க வேண்டும்.

இதன்மூலம் மக்களின் கருத்துக்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். இவற்றை செய்வதற்கு தோழர்கள் ஆகிய நீங்கள்தான் முன் முயற்சி எடுக்க வேண்டும்.

வெறும் சமாதானம் மாத்திரமல்ல, தமிழ் மக்களது நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு வலுவூட்டுவதும் இம் மக்கள் சக்தியே. எனவே இவர்களுள் மறைந்து கிடக்கும் பலத்தை, உத்வேகத்தை இனங்கண்டு அவ்வழியில் அவற்றை நடத்திச் செல்ல தோழர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

நீதியான அரசியல் தீர்வும், சமாதானமும், கௌரவமான வாழ்வும் முழு மக்களின் முயற்சியிலுமே தங்கியுள்ளது, வெறும் ஆயுதங்களில் மட்டுமல்ல. இதைப் புரிந்துகொள்வதும் மக்களுக்கு புரியவைக்க வேண்டியதும் ஒவ்வொரு தோழரின் கடமையாகும்.

இப்படிக்கு,

உங்களன்புத் தோழன்.

# நிகழ்வுகள் நிகழ்வுகள் நிகழ்வுகள் நிகழ்வுகள் நிகழ்வுகள் நிகழ்வுகள்




மலையக கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை 17.12.94 அன்று தி.ஞானசேகரன் எழுதிய "லயத்துச் சிறைகள்" என்ற நாவல் அறிமுகவிழா கொழும்பில் நடைபெற்றது. தினகரன் பிரதம ஆசிரியர் ஆர்.சிவகுருநாதன் விழாவிற்கு தலைமை தாங்கினார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம், வீரகேசரி இணையாசிரியர் கே.எஸ்.சிவகுமாரன், எழுத்தாளர்கள் சாரல்நாடன், சோமகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சிறப்புரையாற்றிய முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரம் கடந்த காலங்களில் நிறைய படைப்புக்கள் வெளிவர வேண்டும் என்ற நோக்கில் உருவம் பற்றிய வரையறைகளை ஒதுக்கிவிட்டு உள்ளடக்கத்தின் மீது மட்டும் கவனம் செலுத்தினோம்.

கணிசமான அளவு படைப்புக்கள் வெளியாகியிருக்கும் இன்றைய நிலையில் உருவம் பற்றிய பிரக்ஞையுடனும் இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

விழாவில் சமகால அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அவர் கருத்து தெரிவித்தார்.

தமது தலைவரை பறிகொடுத்த நாடும் மக்களும் அந்த சம்பவத்தை சுலபத்தில் மறந்துவிட முடியாதென்றபோதும் இது ஒரு இனத்தின் பிரச்சினை என்ற அடிப்படையில் இந்திய அரசும், மக்களும் இனப்பிரச்சினை தீர்வுக்கு இதயசுத்தியோடு உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மலையக மக்களின் வாழ்க்கை தொழிற்சங்க இயக்கத்துடன் பின்னிப் பிணைந்தது. ஆனாலும் தொழிற்சங்கங்களின் இன்றைய போக்குகளை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார் நாவலாசிரியர் ஞானசேகரன். அதுவும் இன்று அவசியமானது என எழுத்தாளர் சாரல்நாடன் தனதுரையில் குறிப்பிட்டார்.

விழாவில் சிறந்த எழுத்தாளர் என சகலரும் பாராட்டிய தி.ஞானசேகரன் குரும்பசிட்டியை பிறப்பிடமாக கொண்டவர். மூன்று தசாப்தங்களாக மலையகத்தில் வைத்தியராய் பணி செய்பவர். இவரது "புதிய சுவடுகள்" "குருதிமலை" ஆகிய இரு நாவல்களும் அரசின் சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவை.

## நாடகப் பயில்வுப் பட்டறை

டிசம்பர் 22,23ந் திகதிகளில் கொழும்பு "விஜிலன்ட் ஹோட்டலில்" யாழ் பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையாளர் க.சிதம்பரநாதனின் நாடகப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது.

இந்துசமய கலாச்சார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடந்த இப்பட்டறையில் பேராசிரியர் சிவத்தம்பி, கலாநிதி மௌனகுரு, சில்லையூர் செல்வராசன், மல்லிகை டொமினிக் ஜீவா, கலாச்சாரத் திணைக்களப் பணிப்பாளர் க.சண்முகலிங்கம் உட்பட கொழும்பு நாடகத்துறை சார்ந்த பல ஆர்வலர்களும் பங்குபற்றினர்.

பார்வையாளர்கள், அரங்கம் என்ற வரையறைகளைத் தாண்டி எல்லோரும் பங்கு பற்றுவதற்கான களம் பற்றி விவாதிக்கப்பட்டது. இடையிடையே நிகழ்த்துதலும் நடைபெற்றது.

இந்த ஒடுக்குமுறைச் சமூகத்துள் தாழ்வுச் சிக்கலுக்குட்பட்டு தமது ஆற்றலிலேயே தமக்கு நம்பிக்கையின்றிச் சுருங்கிப் போயிருக்கும் மக்களைத் தாழ்வுச் சிக்கலிலிருந்து விடுவித்து சுயாதீன மனிதர்களாக விழிப்படையச் செய்வதற்கான அரங்கு தேவை. மக்கள் தாமாகவே முன்வந்து கலந்து கொள்ளவும், உறவு கொள்ளவும், தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவும், செயற்படவும் உரிய 'விடுதலைக்கான அரங்கு' பற்றிய விளக்கங்களைத் தந்தார் சிதம்பரநாதன்.

## சமாதானக் கருத்தரங்கு

பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரியில் டிசம்பர் 26ந்திகதி ஒரு சமாதான கருத்தரங்கும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

திரு குமாரசாமி விநோதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரேம்ஜி, எஸ்.டி.பண்டாரநாயக்கா, மசூர் மௌலானா சர்வமங்களம் கைலாசபதி உட்பட பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றினர். சுமார் 200இற்கு மேற்பட்ட அறிஞர்கள், சமாதான விரும்பிகளும் கலந்துகொண்டனர்.

பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது பலராலும் வலியுறுத்தப்பட்டது.

## பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த கருத்தரங்கு

இந்நிகழ்ச்சி தேசிய கலை இலக்கியப் பேரவையினரால் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் டிசம்பர் 12ந் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ந.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் வீரகேசரி ஆசிரியர் சிவநேசச்செல்வன், லெனின் மதிவாணன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

கைலாசபதியின் இலக்கியத் தேடல்கள், திட்டமிட்ட செயற்பாடு, அவருடைய பல்கலைக்கழக, இலக்கிய உலக நண்பர்கள் என பல விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



# ‘ஒரே பிரதிநிதி’ கோஷம் சரிதானா?

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண முனைந்த அரசாங்கங்கள், அரசியல் விமர்சகர்கள் கூறுவதுபோல் பந்து எதிர்தரப் பாரிடம் இருப்பதாக காட்டித் தப்பிக் கொண்டதைக் கடந்த கால சம்பவங்கள் எமக்கு உணர்த்தும்.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பதாகச் சூழுரைத்த தலைவர்கள், பிரச்சினைக்கு தீர்வு காண மனப்பூர்வமாகச் செயற்படவில்லை. தட்டிக்கழிக்கும் எண்ணத்தில், தமிழ்க் கட்சிகள் - இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமையில்லை.... தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லீம் கட்சிகளுக்கும் இடையே பிரச்சினை.... வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வில் முடிவுக்கு வரத் தடையாய் உள்ளார்கள் என்றெல்லாம் காட்ட முற்பட்ட சம்பவங்கள் உண்டு.

இந்தக் கூற்றுக்களில் உண்மையில்லை என்று ஒட்டுமொத்தமாக மறுத்துவிட முடியாதென்றபோதும், பிரச்சினையை தீர்க்க தடையாய் இருந்த அம்சம் அது என்பதை ஏற்கமுடியாது.

வடக்கு கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களுக்கான தனியான மாகாண சபை போன்ற விவகாரங்களில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த தமிழ் முஸ்லிம் கட்சிகளிடையே அபிப்பிராய பேதங்கள் எழுந்த போதுபிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இழுத்தடிக்க இதனையே பயன்படுத்திக் கொண்டது- பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த தமிழ்க் கட்சிகட்கு கிடைத்த அனுபவம்.

இது பூனைகளிடையே உள்ள பிரச்சினையை வாய்ப்பாகக் கொண்டு அப்பத்தைத் தனதாக்கிக் கொண்ட குரங்கின் கதையை ஒத்தது. இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசும், ஜனாதிபதி சந்திரிகா அவர்களும் முன்னைய தலைவர்களைப்போல் அல்லாமல் இந்தப் பிரச்சினையை நிதானத்துடன் கையாள்வதை நாம் இன்று காண்கிறோம். இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்களுக்கு உருவாக்கியதோடு உலக நாடுகளுக்கும் அந்த நம்பிக்கை தோன்றுமளவிற்கு கருமமாற்றியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் தமிழ் கட்சிகள், இயங்கங்களிடையே உள்ள முரண்பாடுகளை சாட்டாக வைத்து இந்தப் பிரச்சினையை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் செயற்படாதது மட்டுமல்ல, இனப் பிரச்சினைத் தீர்வில் தமிழ் கட்சிகள் - இயக்கங்கள் தொடர்பான ஒரு தெளிவான நிலைப்பாட்டையும் கொண்டுள்ளார்.

**விதுரன்**

> களம் என்பது எங்கனம் வரையறை செய்யப்படுகிறது. போராட்டத்தின் வடிவமும், தன்மையும் களத்தை தீர்மானிக்காதா? ஈழவிடுதலைக்காக போராட முன்வந்த- பங்களித்த இயக்கங்கள் எல்லாம் இவர்கள் கூறும் களத்தில் நின்று போராட தயாராய்த்தானிருந்தன. ஆனால் புலிகள் அந்த இயக்கங்களின் செயற்பாடுகளை முடங்கச் செய்தார்கள். புலிகளின் ஜனநாயக விரோத போக்குகளை விமர்சித்த இயக்கங்கள், வெகுஜன அமைப்புக்களை ஒடுக்குவதில் புலிகள் குறியாய் இருந்தார்கள்.

தனது கருத்தை அவர் பல்வேறு சமயங்களில் வெளிப்படுத்தியும் வந்துள்ளார். 'இந்தியா டுடே' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இதனை தெளிவுபடுத்தியுள்ளார்.

"புலிகள்தான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிகள் என்று நாங்கள் கருதவில்லை. அவர்கள் முக்கியமான பிரதிநிதிகள் அவர்களுடைய ஆயுத பலத்தால் பல முக்கியமான பிரதிநிதிகளை அவர்கள் அழித்தார்கள என்பதை நாம் மறக்கமுடியாது" என அழுத்தம் திருத்தமாக கூறியிருந்தார்.

"இதர தமிழ் கட்சிகளையும் ஏற்றுக் கொண்டாலே சமாதான முயற்சிகளை தொடங்கமுடியும்" இது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளும் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண புலிகளுக்கு விதித்த நிபந்தனைகளில் ஒன்று. இருந்தபோதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உருப்படியான நகர்வுகள் எதனையும் மேற்கொண்டு, முன்செல்வதில் அவர்கள் முனைப்புக் காட்டவில்லை. எனவேதான் முன்பு குறிப்பிட்டவாறு அவர்களின் இந்த கூற்றையும் சந்தேகிக்க வேண்டியுள்ளது. இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையை இம்மியளவும் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தவில்லை.



இந்தியா டுடே சஞ்சிகைக்கு கருத்து தெரிவித்தபோது, பிரதமராயிருந்த சந்திரிகா அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஜனாதிபதியான பின்னரும் அதே கருத்தை முன்வைத்துள்ளது கவனிக்கத்தக்கது.

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த அரசு முன்னுரிமை கொடுத்துள்ளது. ஆயினும் ஏனைய அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் தீர்வு தொடர்பாக பேச்சு நடத்தப்படும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

சொல்வதோடு நின்றுவிடாமல் அண்மையில் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17 எம்.பிக்களை அழைத்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அவர்களுடனும் ஆலோச்னை நடாத்தியுள்ளார்.

## புலிகளின் குரலில் அறிஞர்கள்

இந்நிலையில் நமது தமிழ் அறிஞர்கள் கல்விமான்கள் சிலர். இனப்பிரச்சினை தீர்வில் ஏனைய தமிழ் கட்சிகளின் பங்குபற்றி திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் கூறிவரும் கருத்துக்கள் வியப்பை தருகிறது. புலிகள்தான் களத்தில் நின்று போராடுகிறார்கள் புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அவர்களுடன்தான் பேச வேண்டும் என புலிகளின் குரலிலேயே பேசி அவர்களின் விருப்பத்தையே பிரதி பலிக்கிறார்கள்.

களம் என்பது எங்கனம் வரையறை செய்யப்படுகிறது? போராட்டத்தின் வடிவமும், தன்மையும் களத்தை தீர்மானிக்காதா? ஈழவிடுதலைக்காக போராட முன்வந்த - பங்களித்த இயக்கங்கள் எல்லாம் இவர்கள் கூறும் களத்தில் நின்று போராட தயாராய்த்தானிருந்தன. ஆனால் புலிகள் அந்த இயக்கங்களின் செயற்பாடுகள்ள முடங்கச் செய்தார்கள்.

புலிகளின் ஜனநாயக விரோத போக்குகளை விமர்சித்த இயக்கங்கள், வெகுஜன அமைப்புக்களை ஒடுக்குவதில் புலிகள் குறியாய் இருந்தார்கள்.

ஏனைய இயக்கங்கள் அனைத்தையும் தூய்மையானவையாய் சித்தரிப்பது நம் நோக்கமில்லை. ஆனால், அந்த இயக்கங்கள் மீது தாக்குதல் தொடுக்க புலிகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களிலிருந்து புலிகளும் தப்பிவிட முடியாது. அவர்களும் அதே குற்றங்களை இழைத்தார்கள் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

எமது போராட்டத்தில் ஒப்பீட்டளவில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பவர்கள் யாழ் குடாநாட்டு மக்கள் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் களம் என்பது குடா நாடா? தமிழ் மக்களின் அபிப்பிராயம் என்பது குடா நாட்டிற்குள் வாழும் மக்களின் அபிப்பிராயமா? குடாநாட்டிற்குள் வாழும் மக்கள் தானும் தமது அபிப்பிராயங்களை மனம்விட்டு சொல்லக்கூடிய நிலையில் உள்ளார்களா?

இது ஒருபுறமிருக்க இலங்கைத் தமிழர்கள் சொந்த நாட்டிலும், அயல்நாட்டான இந்தியாவிலும், மற்றும் உலக நாடுகளிலும் (வேலைதேடி செல்லாதவர்கள்) அகதிகளாய் அலைகிறார்கள். இவர்களில் களத்தில் நின்று போராடுபவர்களிடமிருந்து தப்பிப் பிழைக்கத் தஞ்சமடைந்தவர்களும், களத்தில் நின்று போராடுபவர்க்ளாலேயே பலவந்தமாய் விரட்டப்பட்டவர்களும் அடக்கம்.

உலக நாடுகள் எங்கும் அகதிகளாய் அலைந்த தனது சொந்த நாட்டு மக்களுக்காக ஒருநாடு கேட்டுப் போராடுகிறது பாலஸ்தீன விடுதலை இயக்கம். சொந்த நாட்டு மக்களையே உலகநாடெங்கும் அகதிகளாய் அலைய விட்டிருக்கும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வழுவை திருத்திக்கொள்ள ஒரே பிரதிநிதிகள் என்ற கோஷம் உதவுமா?

இங்கே முன்னர் குறிப்பிட்ட அதே அறிஞர்கள், தமிழ் மக்களின் விடுதலை வேண்டிப் போராடப் புறப்பட்ட இயக்கங்கள் தங்களுக்குள் மோதி அழிந்ததாகச் சிலேடையாய் குறிப்பிடுகிறார்கள். தமிழ் சமுதாயம் அரசியலில் குழுக்கள், இலக்கிய வட்டங்கள் என பல்வேறு குழுக்களாக பிரிந்து நின்றது பற்றி சுயவிளக்கம் தந்த இதே ஆசான்கள் "முரண்பாடுகளின் மோதல்தான் வளர்ச்சி" என்று கூறி வந்ததை நாம் ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும். தம்மை நியாயப்படுத்த தங்களளவில் இன்னும் இதே கருத்துக்கு முக்கியத்துவம் தருவதையும் நாம் காணலாம்.

## மோதலா, பாய்ச்சலா?

இனி விடயத்திற்கு வருவோம். எங்கே நிகழ்ந்தது மோதல்? தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் செயற்பாடுகளை தமிழீழத்தில் தடைசெய்வதாயும். அதே இயக்கத்தின் சொத்துக்கள் அனைத்தையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் புலிகள் கட்டளையிட்டனர். இதனால் புலிகளை விடவும் ஆயுதபலத்தில் அன்று மிகவும் பலவீனமடைந்த புளொட் அமைப்பினர் புலிகளின் கட்டளைக்குப் பணிய வேண்டியிருந்தது.

இது மட்டுமல்ல அரசியலில் மாற்றுக் கருத்துக்களுக்கும் நாங்களும் மதிப்பளிக்கிறோம் எனக் காட்டுவதற்கு ஈரோஸ் இயக்கத்தை உதாரணமாய் பயன்படுத்தி வந்த புலிகள், பின்னர் அவர்களையும் தொடர்ந்து அரசியலில் ஈடுபடவிரும்பினால் தம்முடன் இணைந்து கொள்ளும்படி உத்தரவிட்டார்கள்.

உத்தரவிற்கு கீழ்படிந்த ஒரு பகுதியினர் புலிகளுடன் கலந்ததும், மற்றொரு பகுதியினர் இன்னும் ஈரோஸ் என்ற பெயரில் இயங்குவதும் ஊரறிந்த இரகசியம். ஆக, எங்கே ஐயா நிகழ்ந்தது மோதல்?

புலிகள் நிலமைக்குத் தகுந்தாற்போல் ஏனைய இயக்கங்கள் மீது குற்றம் சுமத்தி அவர்களை அழித்தொழித்து, தமது ஏக போகத்தை நிலைநாட்ட விரும்பினார்கள் என்பதே உண்மை.

புலிகள் சக இயக்கங்களை அழிக்க முற்பட்டார்கள் என்று சொல்லப்போய், எங்கே தாம் அந்த இயக்கங்களுக்குச் சார்பானவர்கள் எனப் புலிகள் நினைத்துவிட்டால் சிக்கல் என்று கலங்குபவர்கள்.... புலிகள் ஒருபோதும் விரும்பாத, அவர்களைப்பற்றிய குறைநிறைகளைப் பேசப்போய் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளாமல் தாம் தப்பிக்கொள்ள நினைப்பவர்கள்.... சுலபமாய் மோதலில் ஈடுபட்டு அழிந்ததாய் இட்டுக்கட்டி கதை சொல்கிறார்கள். ☞

படிப்பகம்

www.padippakam.com



## புதிய கண்ணோட்டம்

இவற்றையெல்லாம் பேசக்கூடிய ஜனநாயக சூழல் இன்றில்லை என்றால்.... இவ்வாறு குறைநிறைகளை பேசியவர்களுக்கு நேர்ந்த கதியை எண்ணி பீதியடைவதாயிருந்தால்.... காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும் - காலம் கனிய பாடுபட வேண்டும்.

அதனைவிடுத்து இங்கே நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாய் தெரிவிக்கிறோம் என்ற பாவனையில் கருத்துச் சொல்ல முற்பட்டு சுய பலவீனம் காரணமாகவும், தத்தமது வசதிக்காகவும்.... ஒருதரப்பு நியாயங்களுக்கு அழுத்தம் தருவதும், வெல்லுகிற பக்கம் சாய்வதும், ஜனநாயக வழிமுறைகளை கோட்பாடுகளை வளப்படுத்த உதவாது. மாறாக, தீங்கிழைப்பதாகவே முடியும்.

அரசியல், சமூக, பொருளாதார தேவைகளிலிருந்தே வெவ்வேறு அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள் தோன்றுவதை புரிந்துகொண்டவர்கள்.... மாறுபட்ட கருத்துக்கள் சமூக யதார்த்தம் என்பதை ஏற்றுக்கொள்பவர்கள்.... அரசியலில் மாற்றுக் கருத்துடையவர்களை அழித்தொழிப்பதும் மாற்றுக் கருத்துக்கு இடம்தர மறுப்பதும் ஜனநாயக விரோதம் என்பதையும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் இங்கு நடுநிலையாளர்கள் என்றும் ஜனநாயக நெறிமுறைகளுக்காகக் குரல்கொடுப்பவர்கள் என்றும் கூறிக்கொள்ளும் சிலரும் புலிகள்தான் ஒரே பிரதிநிதிகள் என்று கூறுவதுதான் விந்தையாய் உள்ளது.

இன்று புலிகள்தான் ஒரே பிரதிநிதிகள் என்று புகழ்பாடும் இதே தரப்பினர் "சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" என்று பேசியதும் இன்னும் எமது காதுகளில் ஒலிக்கிறது. அதுமட்டுமல்ல, புலிகளின் நடவடிக்கைகளை அராஜக செயற்பாடுகள் என நுணுகி விமர்சித்தவர்களும் இவர்களே!

> **"இங்கே நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாய் தெரிவிக்கிறோம் என்ற பாவனையில் கருத்துச் சொல்ல முற்பட்டு சுய்பலவீனம் காரணமாகவும், தத்தமது வசதிக்காகவும்.... ஒருதரப்பு நியாயங்களுக்கு அழுத்தம் தருவதும், வெல்லுகிற பக்கம் சாய்வதும், ஜனநாயக வழிமுறைகளை கோட்பாடுகளை வளப்படுத்த உதவாது. மாறாக, தீங்கிழைப்பதாகவே முடியும்."**

மேலும், புலிகள்தான் ஒரே பிரதிநிதிகள் என்பவர்கள் மாற்றுக்கருத்துக்கு இடம்தராத புலிகளின் போக்கையும் ஏற்றுக்கொள்பவர்களாக கருத இடமுண்டு. அவ்வாறெனில், பின்னர் எந்த எண்ணத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பான கருத்துக்களை இவர்கள் முன்வைக்கிறார்கள். இவர்கள் புலிகள் சார்பாகப் பேசுவதாகவும் ஒப்புக்கொள்வதில்லை(?)

போராட்டத்தில் தவறான போக்குகள் விமர்சிக்கப்படலாம் கண்டிக்கப்படலாம். ஆனால் இந்த சமுதாயத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலையின்பால் அக்கறைகொண்டு, இப்போராட்டத்தில் பங்களிக்க முன்வந்த - முன்வருகிற யாரையும் மக்களின் பிரதிநிதி இல்லை என ஒதுக்கி வைக்கும் உரிமை யாருக்கும் இல்லை. அதனை தீர்மானிக்க வேண்டியவர்கள். சுதந்திரமான, ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கின்ற மக்கள் திரளினரே.

எனவே, உண்மையான நடுநிலையாளர்கள், ஜனநாயகவாதிகள், மனித உரிமைவாதிகள், முற்போக்காளர்கள் அனைவரதும் முதற்பணி - பேச, எழுத, தனது எண்ணங்களை வெளியிட, தான் விரும்பும் அரசியலைப் பின்பற்ற ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளுக்காக குரல்கொடுப்பதாகும். தமிழர்களின் பிரதிநிதிகள் யார் என்பது ஒருபுறமிருக்க, மற்றவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் - தமிழர்கள் என்பதையேனும் கருத்திற்கொண்டு செயற்படுங்கள். ●



# கடல் மேல் அலையவிட்டார்

மூதூருக்கும் திருமலைக்கும் இடையில் 15 கிலோ மீற்றர் பயணத்தூரம். கடந்த வருடம் தனியார் பயணப்படகு ஒன்று ஆழ்கடலில் மூழ்கி நூற்றுக்கு மேற்பட்ட பயணிகளைப் பலிகொண்டது நாடறிந்த உண்மை.

இந்தப் பயங்கர விபத்து நடந்த பின்னர்தான் அப்போதைய அரசு கண்விழித்து தனியார் படகுச்சேவையை நிறுத்தியது. அவை பாவனைக்கொவ்வாதவை மாத்திரமல்ல, விபத்து நடந்தால் பிரயாணிகளைக் காப்பாற்ற எந்த வசதியும் கிடையாது.

தனியார் படகுச் சேவை நிறுத்தப்பட்ட பிறகு இ.போ.ச, மூதூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகுகள் சேவைக்கு விடப்பட்டன. ஆனால் அந்தப் படகுகளும் இடையிடையே பழுதடைந்து விடும்.

இவ்விரண்டு படகுகளும் மூதூர் மக்களின் பயணத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதியனவல்ல. படகில் இடம் கிடைக்காமல் பெருந்தொகையான மக்கள் மூதூரிலிருந்து கிண்ணியாவிற்கு தனியார் படகு மூலம் வந்து அங்கிருந்து திருமலை செல்கின்றனர்.

- நாளொன்றுக்கு 1700 பிரயாணிகள (200 பொலிஸ் ஆயுதப்படையினர் உட்பட) பயணம் செய்கின்றனர். அதிலும் ஆயுதப் படையினருக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதால் பயணிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

உணவு, தங்குவதற்கு இடம் என மக்கள் நாளாந்தம் அலைக்கழிகின்றனர்.

திருமலையிலிருந்து மாலையில் மூதூர் செல்லவரும் பயணிகள் படகில் இடம் போதாமையால் திரும்பி நகருக்குச் சென்று இரவு தங்குவதற்கு இடம் தேடுவதென்பது மிகக் கடினமான காரியம்.

இந்தப் படகு அவலம் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் இன் திருமலைப் பிராந்தியச் செயலாளர் இ.திலகராஜா அவர்கள் கருத்து வெளியிடுகையில்,

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சமீபத்தில் வாக்களித்தபடி உடனடியாக "மகாவலி" என்ற துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான மோட்டார் படகைச் சேவைக்கு விட்டால் இந்த நெருக்கடி ஓரளவு குறையும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரசு சார்பற்ற நிறுவனங்களையும் அமைச்சு சேவைக்கழைத்தால்தான் தற்போதுள்ள அவலம் நீங்க வழியுண்டென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



## மூதூர் பச்சனூர் அகதிகள் அவலம்

மூதூர் பச்சனூர் அகதிமுகாமின் குடிசைகள் யாவும் சீர்குலைந்த நிலையிலிருப்பதால் அந்த முகாமிலுள்ள அகதிகள் மழையினால் கஷ்டப்படுகிறார்கள்.

அவர்களுடைய சொந்த இடமான இறால்குழி, நாவலடிப் பகுதிகள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாதத்தால் மீள்குடியேற்றம் நடைபெறவில்லை எனச் சொல்லப்படுகிறது.

எனவே அகதிமுகாமைப் புனரமைக்க குடிசைகளுக்கு கிடுகு மட்டைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டியுள்ளது.

## கிளப்பன்பேர்க் அகதிமுகாம்

கிளப்பன்பேர்க் முகாமில் வசிக்கும் அகதிகள் கூடுமானவரை அவர்களின் சொந்த இடங்களான கன்னியா, ஆத்திவெட்டை, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் மீளக் குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

மீளக் குடியமர்த்த முடியாத அகதிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.



## நிலாவெளி அகதிகள் முகாம்

நிலாவெளி அகதிகள் முகாமில் உள்ளவர்களின் மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

## வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம்

திருமலை மாவட்டத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு நிதி உதவி பலருக்கு கிடைக்கவில்லை.

## வீதிப்புனரமைப்பு

மூதூர் திருமலை படகுச் சேவை நடைபெறாத காலங்களில் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனை நிவர்த்திக்க அல்லை-கந்தளாய் உடாக பஸ்சேவை சீராக நடைபெற்றால் மக்கள் பயனடைவர். இதற்கு வசதியாக அல்லை-கந்தளாய் பாதை சீராக்கப்பட வேண்டும். மதகுகள் ஒழுங்காகக் கட்டப்படல் வேண்டும்.

மூதூரிலிருந்து வெருகல் வரையுள்ள வீதி வெள்ளத்தால் மிகவும் சீர்குலைந்திருப்பதால் அவை புனரமைக்கப்பட வேண்டும்.

இவ்வேண்டுகோள்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரிடம் திருமலை பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் விடுத்துள்ளது.

## அத்துமீறிய சிங்களக் குடியேற்றம்

இனமுரண்பாடு கூர்மையடைந்து வன்செயல்கள் ஆரம்பமான காலகட்டத்தில் மூதூர் பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள தனியார் நிலங்களில் சில சிங்களக் குடும்பங்கள் சட்டவிரோதமாகக் குடியிருந்து வந்தனர்.

1990இல் நடைபெற்ற வன்செயல்களில் மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகளையும் கடைகளையும் உடைத்துக் கொள்ளையிட்டு தீக்கிரையாக்கிய சம்பவங்களில் இவர்களே முன்னின்று பல செயல்களைச் செய்ததாக அறியப்படுகின்றது.

இவர்களுக்கு கந்தளாய் பகுதியில் அப்போதைய அரசு குடியிருக்கும் காணிகளும் பயிர்செய்யும் நிலங்களும் வாங்கி வீடுகள் கட்டவும் உதவியது.

பிரச்சினை என்னவென்றால் தற்போது இவர்கள் மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கான தபாற்கந்தோர், மக்கள் வங்கி, அரச திணைக்கள வாடிவீடு போன்ற அலுவலகங்களுக்குச் சொந்தமான காணிகளில் பாதுகாப்புப் படையினரின் அனுசரணையுடன் குடியேறியுள்ளனர்.

இதனால் மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனை உடனடியாக நிறுத்தி அவர்களுக்கென கந்தளாய் பகுதியில் வழங்கப்பட்ட காணிகளில் குடியேற்றி தற்போதுள்ள பதற்றமான சூழ்நிலையை மாற்றுவார்களா?

இது விடயம் பற்றி திருமலைப் பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் நீர்ப்பாசன அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. ●

படிப்பகம்

www.padippakam.com



# புண்ணை விட்டுவிட்டு நெறிக்கு மருந்து கட்டும் புலிகளின் அணுகுமுறை

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு கண்டு இந்நாட்டில் சமாதான, சகவாழ்வை ஏற் படுத்துவேன் என சூழுரைத்து ஆட்சிக்கு வந்த புதிய அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக புலிகளுடன் பேச விழைந்தது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்ற தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத் தும் நோக்குடன் தானாகவே பொருளாதாரத் தடையிலும் பாதியை நீக்கியது.

முதற்சுற்று பேச்சுவார்த்தைகள் ஓர் நல்ல ஆரம்பத்திற்கான படியாகவே கருதப்பட்டது. எனவே அங்கு இருபக்க புரிந்துணர்வுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டதே தவிர இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயங் கள் தொடப்படவே இல்லை.

> “ தாம் அரசியற் தீர்வுக்குத் தயார் எனக்கூறும் புலிகள் ஏன் ஓர் மாற்று அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கக்கூடாது? ”

மாறாக புலிகள் மின்சாரம் வழங்கப்பட வேண்டும், யாழ் பொதுசன நூலகம் கட்டித் தரப்பட வேண்டும், மக்கள் குடாநாட்டுக்கு வெளியே பயணம் செய்ய வசதியாக பூநகரிக் கடற்பாதை திறக்கப்பட வேண்டும் என்றே கோரினர். மின்சாரம் வழங்குவதற்கு அரசும் உடனடியாகவே 8 பெரிய ஜெனேரட்டர் களை அனுப்பி வைத்தது.

அதனைத் தொடர்ந்து மக்கள், இனப் பிரச்சினை தொடர்பான விடயங்கள் பேசப்பட வேண்டும், தமது இழந்துபோன அமைதியான ஒற்றுமையான வாழ்க்கை மீண்டும் வழ மைக்குத் திரும்ப வேண்டும் என்றே எதிர் பார்த்தனர். இப்பேச்சுவார்த்தையுடனேனும் யுத்தத்திற்கு ஓர் முடிவு ஏற்பட வேண்டும், இருதரப்பு அடக்குமுறைகளிலிருந்தும் விடு பட்டு கௌரவமான மனிதர்களாய் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற ஆவலோடும், நம்பிக்கையோடும் பேச்சுவார்த்தை விடயங் கட்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

பல்வேறு புத்திஜீவிகளும் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என தத்தம் கோணங் களில் பத்திரிகைகள் மூலம் தமது கருத்துக் களை வெளிப்படுத்தினர். ஏறத்தாழ 2 தசாப்தத்தின் பின் கொழும்பில் சிங்கள-தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து சமாதானத்திற்காக ஓங்கிக் குரல் கொடுத்தனர்.

முதற்கட்ட பேச்சுவார்த்தைக்கு அரசு சார்பாக யாழ் சென்ற குழுவினரை புலிகளின் தடைகளையும் மீறி அவர்கட்கு எரிச்சல் ஏற்ப டும் வகையில் மக்கள் திரளாக மொய்த்து முத்தமிட்டும் கைகுலுக்கியும் வரவேற்று, அரசியற் தீர்வுக்கான தமது அதீத ஆவலையும் வெளிக்காட்டிக் கொண்டனர்.

ஆனால் அனைத்துத் தரப்பு மக்களாலும் இத்தனை ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை கால வரையறை இன்றி ஒத்திப் போடப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கிடைத்த பல சந்தர்ப்பங்களும் பேச்சுவார்த்தைகளும் குழப்பப்பட்டன.... அல்லது தோல்வியில் முடிந்தன.

பேச்சுவார்த்தை என்ற வரலாற்றில் நாம் அடையாளம் காண வேண்டிய முக்கிய அம்சம் ஒன்றுண்டு. அதுதான் 'புண்ணுக்கு' சிகிச்சை அளிக்காமல் அதனால் ஏற்பட்ட 'நெறி'க்கு மட்டும் சிகிச்சை செய்ய முற்படும் புலிகளின் அணுகுமுறை.

இன்று வடக்குக்கு இன்னும் தொடரும் பொருளாதாரத் தடை, போக்குவரத்துப் பாதைகள் அடைப்பு, மீன்பிடி அனுமதி மறுப்பு உட்பட லட்சக்கணக்கானோரின் அவல மான அகதி வாழ்க்கை அனைத்தும் இனப் பிரச்சினையின் காரணமாக, அதனால் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளாகும்.

க. சர்வேஸ்வரன்

எனவே இப்பிரச்சினைகட்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த உளப்பூர்வமாக விரும்பும் எவரே னும் யுத்தத்திற்கு முடிவுகட்டும் அரசியற் தீர்வினை விரைவாக ஏற்படுத்த முயச்சிப் பார்களேயன்றி அதனாலேற்பட்ட விளைவு களை முன்னிறுத்தி அடிப்படைக் கோளா றைச் சரிசெய்ய மறுக்கும் அணுகுமுறை யைக் கையாளமாட்டார்கள்.

இரண்டாவது கட்டப்பேச்சுவார்த்தையில் புலிகள் தொடர்ந்து கேட்டு வந்த போர் நிறுத் தம் பற்றி ஆராய்வதற்கும் அரசு தயாராக இருந்தது என்பதும் அதற்கேற்ப பேச்சுவார்த் தைக் குழுவில் இராணுவ உயர்மட்டப் பிரதிநிதி சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததும் பகிரங்கமான விடயம்.

ஆனால் புலிகள் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைப் பற்றிப் பேசுவோம் என மக்களின் பெயரால் தம்மை வலுப்படுத்தும் வகையிலான நிபந்தனைகளைப் போட்டே பேச்சுவார்த் தையை இழுத்தடிப்பது அல்லது குழப்புவது என பிரச்சினையை அணுகுகின்றனர்.

மக்களின் போக்குவரத்திற்கு பூநகரிக் கடற் பாதையை விட ஆனையிறவு தரைப் பாதையே அதிக பாதுகாப்பானதென்பதும், கொழும்பிலிருந்து குடாநாட்டு மக்களுக்கு துரித உணவு மற்றும், அத்தியாவசிய பொருட்கள் விநியோகத்திற்கும் அத்தரைப் பாதையே இலகுவானதும், செலவு குறைந்த தென்பதும் யாழ்ப்பாணத்தைத் தெரிந்த அனைவர்க்கும் தெரியும்.

ஆனால் ஆனையிறவைத் திறக்க மாட் டோம் பூநகரிப்பாதையைத் திறவுங்கள் என புலிகள் முரண்டு பிடிப்பது யாருடைய நலனை நிறைவு செய்ய? தரைப்பாதை திறக்கபட்டால் பொருட்கள் அதிகம் போகும். விலைகள் வீழ்ச் சியடையும், மக்களின் பிரச்சினைகள் குறை யும், புலிகட்கு பல்வேறு வியாபாரங்களாலும் வரும் வருமானம் குறையும்.

இது யார் நலனைப் பாதுகாக்கிறது?

மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதற்காக எடுக்கப்படும் பெரியளவிலான நடவடிக்கைகள் எவையும் இனி யுத்தம் நடக்காது, குண்டுகள் விழாது என உத்தரவாதப்படுத்தப்பட்டால் மட்டுமே நீடித்த பலனைத்தரும். இல்லையேல் அவை மீண்டும் அழிவுக்குள்ளாகும்.

எனவே யுத்த நிறுத்தம் அரசியற் தீர்வுக் கான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு அத னை நடைமுறைக்குக் கொண்டுவர வேண் டும். ஆனால் மாறாக மாவீரர் தின உரையில் பிரபாகரனும் பின்னர் பாலசிங்கமும் "இனப் பிரச்சினைக்கான அடிப்படைகள் பற்றி பின் னர் ஆராயலாம். இப்போது மக்களின் வாழ் வை வழமைக்குத் திருப்பும் விடயங்கள் பற்றி மட்டும் பேசுவோம்" என கூறியுள்ளனர்.

முதலில் நெறிக்குச் சிகிச்சை செய்வோம் பின்னர் புண்ணுக்குச் சிகிச்சை செய்வதைப் பற்றி யோசிப்போம் என்ற தவறான அணுகு முறையை ஞாபகப்படுத்த முயலும் வைத்தியர் களால் புண்ணைப் புரையோட வைக்க மட்டுமே முடியும்.

## புலிகளும் பேச்சுவார்த்தைகளும்

இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக டெல்லியில் அன்றைய பாரதப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களுடன் பேசும்போது புலிகள் இவ் உடன்பாட்டின் குறை நிறைகள் பற்றிப் பேசவில்லை. அல்லது இவை எந்தள வுக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரமுடை யதாக சட்ட உருப்பெற வேண்டும் என்று பேசவில்லை.

மாறாக, ஆயுதங்களை ஒப்படைத்தால் மாதாந்தம் 50லட்சம் இந்திய ரூபாய் வசூல் எமக்கு இல்லாமற் போகும். எனவே எமது உறுப்பினர்களைப் பராமரிக்கவும் கட்சி செல வுக்கும் நீங்கள் 50 லட்சம் ரூபாய் மாதாந்தம் அப்போது (ஒன்றேகால் கோடி இலங்கை ரூபாய்கள்) தரவேண்டும் என்பதும், "அமையப் போகும் இடைக்கால அரசில் எமக்கு முதல் வர் பதவியும், அதிக பிரதிநிதித்துவமும் தர வேண்டும்" என்பதையுமே வலியுறுத்தி உத்தரவாதமும் பெற்றுக் கொண்டனர். அதில் அவர்கள் மக்கள் நலனின் அடிப்படை யில் எதனையும் பேசவில்லை.

> “ ஓர் மாற்று அரசியற் திட்டம் எப்படியிருக்க வேண்டும் என்ற விவாதம் புதிதாக ஆரம்பிக்க வேண்டிய ஒன்றாகவே இப்போதில்லை. இவைபற்றி இலங்கையின் அனைத்து அரசியற்கட்சிகட்கும், தமிழ் மக்களுக்கும், அரசுக்கும் போதிய தெளிவு உண்டு. ”

பின்னர் புலிகள் அமைதிப்படையுடன் சண்டையை ஆரம்பித்த பின்னர் கூட சென் னையில் புலிகளின் தளபதி கிட்டுவுடன் இந்திய அரசுப்பிரதிநிதிகள் சண்டையை நிறுத்தி அரசியற்தீர்வை முன்னெடுக்கும் வகையில் ஓர் உடன்பாட்டுக்கு வரமுற் பட்டனர்.

அப்பேச்சுவார்த்தையிலும், இந்தியாவிலி ருக்கும் அகதிகளை மீளக்குடியேற்றுவது, வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு வழங்குவது தொடர்பாக பேசப் பட்டபோது, அதற்கேற்ப செலவான நூற் றுக்கு மேற்பட்ட கோடி பணத்தையும் நம்மி டமே தரவேண்டும் என்றனர் புலிகள்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புலிகளும் உள்ளடங்கிய பொதுச் சபை ஒன்றை நிறுவி அதன்மூலம் இத்திட்டத்தை செயற்படுத்தலாம் என இந்திய அரசு வைத்த திட்டத்தை நிராகரித்தனர். இதன்மூலம் மக்கள் நலனுக்குப் பயன்படக்கூடிய பலநூறு கோடி ரூபா மக்களுக்குப் பயன்படாமலே போனது.

தொடர்ந்து பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது 18 மாதகாலமாக நடத்திய பேச்சுவார்த்தையில் என்ன பேசப்பட்டது என்பது இருதரப்பினராலும் மக்களுக்கு பெளிப்படுத்தப்படவேயில்லை.


மேலும் ஓர் பேரழிவுக்குப் பினனால் சில மாதங்களின் முன் பி.பி.சிக்கு பிரபாகரன் அளித்த பேட்டியில் 18மாதகாலமாக பிரேம தாச அரசுடன் பேசினோம் அவர்கள் மக்க ளின் அடிப்படைப் பிரச்சினை பற்றிப் பேசவே இல்லை என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள் ளார்.

அரசுதான் மக்களின் பிரச்சினைபற்றிப் பேசவில்லை புலிகள் தாம் என்ன பேசினார் கள் என்று சொல்லவில்லையே? 18மாதகாலம் மக்களுக்காகப் போராடுவதாக, மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் இயக்கத் தின் தலைவர் எதிரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். மக்களின் பிரச்சினைகள் பற்றியோ தீர்வுபற்றியோ பேசவில்லை என்பது அவரின் மக்கள் தொடர்பான பொறுப்புணர் வையும், அவரது அரசியல் முதிர்ச்சியையுமே கேள்விக்குள்ளாக்குகிறது.

18மாதகாலப் பேச்சை அரசும் புலிகளும் வெளியிடாதபோதும், பேச்சுவார்த்தையிற் கலந்துகொண்ட அமைச்சர்கள், அதிகாரி களின் கூற்றுப்படி இந்தியப்படையை வெளி யேற்றுவது தொடர்பாகவும், வட-கிழக்கு மாகாண அரசை நிர்மூலமாக்குவது பற்றி திட்டங்கள் மட்டுமே ஆராயப்பட்டன.

இதன்மூலம் பலகோடி பெறுமதியான ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் ஏனைய பல வசதிகளையும் பிரேமதாசா விடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

தொடர்ச்சி... பக்கம் 7




படிப்பகம்

www.padippakam.com



இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய கடமைப்பாடுள்ள அரசும் சரி, மக்களின் அமைதியான சுபீட்சமான வாழ்வுக்கு வழி வகுக்க வேண்டிய பொறுப்பிருப்பதாகக் கருதும் புலிகளும் சரி, மக்களின் பிரச்சினைத் தீர்வுபற்றிப் பேசவில்லை என்றால்.. .மக்களுக்குப் பிரச்சினை இருந்தால்தான் இவர்கள் இருசாராரின் அரசியல் இருப்பு உறுதி செய்யப்படும் என்பதனாலன்றி வேறென்ன? இத்தகைய பேச்சுவார்த்தை எவ்வாறு தொடரமுடியும்?

> “மேலும் ஓர் பேரழிவுக்குப் பின்னால் சில மாதங்களின் முன் பி.பி.சிக்கு பிரபாகரன் அளித்த பேட்டியில் 18மாதகாலமாக பிரேமதாச அரசுடன் பேசினோம் அவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினை பற்றிப் பேசவே இல்லை என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அரசுதான் மக்களின் பிரச்சினைபற்றிப் பேசவில்லை புலிகள் தாம் என்ன பேசினார்கள் என்று சொல்லவில்லையே? மக்களின் பிரச்சினைகள் பற்றியோ தீர்வுபற்றியோ பேசவில்லை என்பது அவரின் மக்கள் தொடர்பான பொறுப்புணர்வையும், அவரது அரசியல் முதிர்ச்சியையுமே கேள்விக்குள்ளாக்குகிறது.”

ஆனால் யுத்தம் தொடங்கியபோது அரசு ஏமாற்றி விட்டதாக புலிகளும், புலிகளே பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டதாக அரசும் ஆளைஆள் குற்றம் சாட்டினார்கள். மக்கள் மீண்டும் யுத்த சகதிக்குள் வீழ்த்தப் பட்டார்கள்.

“அமைதிப்படை வெளியேறினால் அமைதி வந்துவிடும்” மாகாண அரசு கலைக்கப்பட்டால் சுதந்திரம் கிடைத்துவிடும். அந்நியரை வெளியேற்றி சகோதரருடன் (பிரேமதாசாவுடன்) பேசி தீர்வுகாண்போம் என்று அன்று மக்களுக்குச் சொல்லப்பட்டது. அன்றும் துப்பாக்கிகளால் வாயடைக்கப்பட்ட மக்கள் அமைதியாய் இருந்தனர். புலிகள் சொல்வதே மக்கள் கருத்து என்ற தோற்றம் ஏற்பட்டது. விளைவு மக்கள் புலிகளின் யுத்தமோக வலைக்குள் வீழ்த்தப்பட்டனர்.

இன்றும் மக்களுக்காகப் போராடுவதாகக் கூறியே, இன்னோர் யுத்தத்திற்கு தம்மை வலுப்படுத்தும் நிபந்தனைகளை முன்னிறுத்தி பேச்சுவார்த்தையைக் குழப்ப முனையும் போக்கே தென்படுகிறது.

இன்றும் அவர்களின் திறந்தவெளிச் சிறைக்குள் (குடாநாடு) வாழும் மக்களை வைத்துக் கொண்டு அவர்களின் கருத்துக்களை அடக்கிவைத்து அவர்கள் பெயரால் தமது கருத்தைத் திணிக்க முயலும் கபடத்தனம் இனங்காணப்பட வேண்டும்.

## புலிகள் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும்

எல்லாத்தரப்பு மக்களும் அரசியற் தீர்வுக்கும் அமைதிக்குமான தம் ஆர்வத்தை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தி விட்டனர். சர்வதேச அபிப்பிராயங்களும் அரசின் சமாதான முன்னெடுப்புகளை ஆதரித்தே நிற்கிறது.

பேட்டிகளில் தாம் அரசியற் தீர்வுக்குத் தயார் எனக்கூறும் புலிகள் ஏன் ஓர் மாற்று அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கக் கூடாது? சமஷ்டியோ அல்லது மாநில சுயாட்சியோ அல்லது அவர்கள் எதிர்பார்க்கும் வேறு முறையான தீர்வோ பரவலாக மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை முன்வைப்பதில் என்ன தடையாக இருக்க முடியும்? அல்லது யார் தடையாக இருக்க முடியும்?

மாறாக, அத்தகைய ஓர் திட்டத்தை முன்வைக்கும் பட்சத்தில் பெரும்பாலும் அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளும் அதனை ஆதரித்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

## தீர்வு தொடர்பாக புதிதாகப் படிக்க வேண்டியதில்லை

ஏனைய தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை கடந்த ஐந்தாண்டு காலமாக , இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக சர்வகட்சி மாநாடுகளிலும் சரி பின்னர், பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் சரி மிகத் தெளிவாக தமது தீர்வுத்திட்டத்தினை முன்வைத்திருப்பதுடன், அது தொடர்பாக சர்வகட்சி உறுப்பினர்கள் கொண்ட தெரிவுக்குழுவில் நீண்ட விளக்கங்களையும் கொடுத்துள்ளனர்.

இறுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானையும் இணைத்து பரந்தளவிலான தமிழ்த் தலைவர்களின் அங்கீகாரத்துடன் தீர்வின் அடிப்படை அம்சங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் 4ம் அம்சத்திட்டத்தையும் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்தனர்.

அடிப்படையில் பொதுவாக–

1. வடக்க கிழக்கு இணைப்பு நிரந்தரமாக உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும்,
2. தீர்வு என்பது சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பதும் (அதாவது அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் இவை இந்திய மாநில அதிகாரங்களையொத்த வகையில் எவ்வகையிலேனும் மத்திய அரசின் தலையீட்டுக்கு இடமளிக்கக்கூடாது என்பதும் வலியுறுத்தப்பட்டது)
3. மாகாண அரசுக்கு அல்லது அச் சமஷ்டி அலகுக்கு பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பாக சட்டவாக்கம், அமுலாக்கல் அதிகாரங்கள் இருக்கவேண்டும்.
4. அதிகாரப் பங்கீட்டில் சட்டம் ஒழுங்கு, நிலப்பங்கீடு போன்றவற்றின் அதிகாரம் மாநில அரசுக்கு வரவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

எனவே ஓர் மாற்று அரசியற் திட்டம் எப்படியிருக்க வேண்டும் என்ற விவாதம் புதிதாக ஆரம்பிக்க வேண்டிய ஒன்றாகவே இப்போதில்லை. இவைபற்றி இலங்கையின் அனைத்து அரசியற்கட்சிகட்கும், தமிழ் மக்களுக்கும், அரசுக்கும் போதிய தெளிவு உண்டு.

## எச்சரிக்கை தேவை

எனவே மீண்டும் மீண்டும் யுத்தத்திற்கும் அழிவுகட்கும் வழிகோலிய பழைய நடைமுறைகளை அனைவரும் கசப்பான ஓர் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் அரசும் காலங்கடத்தும் தந்திரோபாயத்தைக் கையாண்டது.

> “இப்பிரச்சினைகட்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த உளப்பூர்வமாக விரும்பும் எவரேனும் யுத்தத்திற்கு முடிவுகட்டும் அரசியற் தீர்வினை விரைவாக ஏற்படுத்த முயச்சிப்பார்களேயன்றி அதனாலேற்பட்ட விளைவுகளை முன்னிறுத்தி அடிப்படைக் கோளாறைச் சரிசெய்ய மறுக்கும் அணுகுமுறையைக் கையாளமாட்டார்கள்.”

ஆனால் புதிய அரசும் அத்தகைய நடைமுறைக்குள் வீழ்ந்துவிடாது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதேபோன்று புலிகளையும் மாற்றுத்திட்டத்தை வைக்குமாறு கேட்க வேண்டும்.

இவ்விடயத்தில் காலங்கடத்துதல் என்பது பல்வேறு திசை திருப்பல் நடவடிக்கைகளுக்குள் பேச்சுவார்த்தையை இழுத்துச் செல்ல வாய்ப்புண்டு.

புலிகள் மாற்றுத் தீர்வுத் திட்டத்தினை முன்வைக்க மறுக்கும் பட்சத்தில் அரசு அனைத்துத் தமிழ்க்கட்சிகளை அழைத்து அவர்களின் ஏகோபித்த ஆலோசனையின் பேரில் ஓர் தீர்வுத்திட்டத்தை நடைமுறைப் படுத்த முன்வரவேண்டும். ●

## புத்தகம் புதிது

...8ம் பக்கத் தொடர்ச்சி

“அப்பாவித் தமிழ் மக்களை இந்திய இராணுவம் தாக்கக்கூடிய வகையில் அவர்களை கோபமடையச் செய்வோம். எந்தச் சந்தேகமும் எழாத வகையில் அது மிக நேர்த்தியாக நடக்கும்”.....

.....ஆனால் இந்தியா தயாராக இருக்கவில்லை. அக்டோபர் 10ம் திகதி சண்டை தொடங்கும்வரை அவர்கள் தயாரில்லை. ஆகஸ்ட்–செப்டம்பரில் பலமுனை அழுத்தங்களுக்கும் மேலால் புலிகளின் துணிச்சலான போர்த்திறன், அஞ்சாது தியாகம் செய்யக்கூடிய ஈடுபாடு என்பவற்றை தமக்கு நெருக்கமானவர்கள் மூலம் அனேக படை அதிகாரிகள் தெரிந்து கொண்டனர். ஏனைய அமைப்புகளை விட புலிகள் இந்தியப்படையினரின் விருப்பத்திற்குரியவர்களானார்கள். இந்திய நடமாடும் வைத்தியசாலைக் கப்பல் 3 டாக்டர்களுடனும் 15 தாதிகளுடனும் காங்கேசன்துறை வந்தது. இதில் முதல் சிகிச்சை பெற்றவர் குஞ்சு என்ற ஓர் புலி உறுப்பினராவார். இந்தியப்படை கடும் காயமுற்று நோய்வாய்ப்பட்டிருந்த 15 புலிகளை ஹெலிகொப்டரில் சிகிச்சைக்காக இந்தியாவுக்கு எடுத்துச் சென்றனர்.....

(பக்கம் 257)

.....இராணுவத்தினர் போரால் பாதிக்கப்பட்ட வட–கிழக்கு மாகாணத்தில் ஓர் சிவில் ஒழுங்கைக் கொண்டுவரப் பாடுபட்டனர். தமிழ்ப் பகுதிகளும் அதன் மக்க மே உடன்படிக்கையின் உடனான காலகட்டத்தில் ஓர் அமை ன இடைவேளை ஏற்பட்டதற்கு சாட்சி. அனைவரையும் சந்தோசம க வைத்திருப்பதற்கு இந்தியா முடிந்தளவுக்கு முயற்சி எடுத்தது....

(பக்கம் 258)

ஏனைய குழுக்களைவிட ஈ.பி.ஆர்.எல்.எஃப் தான் ஒப்பந்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் பாரிய அளவில் மக்கள் மத்தியில் தொடர்புகளை மேற்கொண்டது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் குறிப்பிடத்தகுந்த ஆதரவு அதற்கு இருந்தது; பாரிய அளவில் பொதுக்கூட்டங்களை அமைதிப்படையின் வருகைக்குப் பின் நடத்தியது. சில இடங்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைமைப்பீடமே ஆச்சரியப்படுமளவிற்கு அக் கூட்டங் களில் மக்கள் பங்குபற்றினர்.

இதற்கு மாறாக, எல்.ரி.ரி.ஈ யாழ் குடாநாட்டுக்கு வெளியே நடத்திய கூட்டங்களில் பங்குபற்றிய மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. இவ்வாறு தமது கூட்டங்களுக்கு மக்கள் குறைவாக வந்ததையிட்டு ஆத்திரமுற்ற யோகி, கிளிநொச்சியில் நடந்த ஒரு கூட்டத்தில் “நன்றி கெட்டவர்கள்” என்று குறிப்பிட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூட்டங்களில் மக்கள் பெருமளவிற்குக் கலந்து கொண்டதற்கு யுத்தத்தால் சலிப்படைந்த நிலையும், புலிகளால் தொடக்கப்பட்ட சகோதரப்படுகொலையால் ஏற்பட்ட விரக்தியும்தான் காரணமாகிறது. ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப், மக்களுக்கு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியது. இந்த ஒப்பந்தமானது தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு இறுதி அத்தியாயமல்ல.

மட்டக்களப்பில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பத்மநாபா பேசும்போது, “இனப்பிரச்சினைக்கு இந்த ஒப்பந்தம் இறுதியான தீர்வு அல்ல. ஆனால் இந்திய அரசாங்கம் தமிழர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வோம் என்று எமக்கு உத்தரவாதமளித்துள்ளது. அந்த நியாய பூர்வ மான உரிமைகளுக்காக நாம் தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்” என்று குறிப்பிட்டார்.

(பக்கம் 263)

## அமைதியை பலி கொண்ட அரசியல் படுகொலை

**– 29.10.94 தினமணியில் (இந்தியா) மாலன்**

....புலிகள் நிஜமாகவே பேச்சுவார்த்தைகளை விரும்புகிறார்களா? பேச்சுவார்த்தை குறித்து எந்த முயற்சியும் மேற்கொள்ளும் முன்னர் சந்திரிகா இதை அறிந்து உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது. ஏனெனில் மக்கள் பங்குகொள்ளும் ஒரு ஆட்சிமுறையை வட இலங்கையில் ஏற்படுத்த முயற்சிக்கும் போதெல்லாம், வெளிப்படையாக அதை வரவேற்று பேச்சுவார்த்தைக்கு முன்வருவது போல புலிகள் நடந்து கொண்டாலும், உள்ளூர அதை முறியடிப்பதற்கான முயற்சிகளைச் செய்தே வந்திருக்கிறார்கள் என்பதுதான் வரலாறு.

இந்திய இலங்கை ஒப்பந்தம், தமிழ் பகுதிகளில் இந்திய மாநிலங்களில் உள்ளதைப் போன்ற ஒரு மக்களாட்சி அமைப்பை ஏற்படுத்த வழி செய்தது. ஆயுதக் கடத்தலில் ஈடுபடுவதில்லை, ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்று இந்தியாவுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிகளை புலிகள் வேண்டுமென்றே மீறி, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முறிக்கும் முதல் நடவடிக்கைகளை எடுத்தார்கள். சமீபத்திய அமைதிப் பேச்சுவார்த்தைகள் துவங்குவதற்கு முன்புகூட ராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி, அதை எரிச்சலூட்டினார்கள். அதையும் மீறி பேச்சுவார்த்தைகள் தொடர இருந்தபோது படுகொலை நடந்துவிட்டது.

படுகொலை நடந்த சூழ்நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும். திங்கட்கிழமை காலை பேச்சுவார்த்தை துவங்க இருந்தது. ஞாயிறு நள்ளிரவு படுகொலை நடந்துள்ளது. புலிகள்தான் இந்தப் படுகொலையைச் செய்தார்கள் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஆயினும் அவர்கள்மீது சந்தேகம் கொள்வதற்கு நிறையக் காரணங்கள் இருக்கின்றன.

பேச்சுவார்த்தைக்கு இடைஞ்சல் செய்வதில் புலிகளுக்கு என்ன லாபம்? பேச்சுவார்த்தையின் மூலம் யாழ்ப்பாணத்தில் ஒரு மக்களாட்சி அமைப்பு ஏற்பட்டால் தமிழர்கள்தானே பலனடைவார்கள்? தமிழர்கள் பலனடைவார்கள் என்பது உண்மைதான். ஆனால் மக்களாட்சி ஏற்பட்டால், தட்டிக்கேட்க முடியாத நிலையில் ஆயுதங்களின் துணைகொண்டு அதிகாரம் செலுத்தி வருகிற ஒருசில தனிநபர்களின் நலன் பாதிக்கப்படும். அவர்கள் கையில் இருக்கும் அதிகாரம் பறிபோய் அது மக்கள் கைக்கு வந்துவிடும்.

ஒவ்வொருமுறை பேச்சுவார்த்தை தடைப்படுவதற்கு இந்த தன்னலம் காரணமாக இருக்கக்கூடுமோ?

படிப்பகம்


www.padippakam.com



# புத்தகம் புதிது

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான புத்தகங்கள் வரிசையில் TIGERS OF LANKA "இலங்கைப் புலிகள்" என்ற ஓர் புதிய புத்தகம் பிரபல பத்திரிகையாளர் திரு நாராயணசாமி என்பவரின் ஆக்கத்தில் விற்பனைக்கு வந்துள்ளது. AFP என்ற பிரெஞ்சு செய்தி ஸ்தாபனத்தில் பணிபுரியும் இவர் கடந்த 15 ஆண்டுகட்கு மேலாக பத்திரிகைத்துறையில் பணியாற்றி வருபவர்.

இலங்கை, இந்தியா, பிரித்தானியா உட்பட பல நாடுகட்குச் சென்று நூற்றுக்கணக்கான பல்வேறு இயக்கப் போராளிகளையும், இயக்கத் தலைவர்களையும், பல்வேறு அரசியற் கட்சித் தலைவர்களையும், இனப்பிரச்சினையுடன் பல்வேறுவகையிலும் தொடர்புபட்ட பல அதிகாரிகளையும் சந்தித்து பெருமளவு தகவல்களை இப்புத்தகத்திற்காகத் திரட்டியுள்ளார். சுதந்திர இலங்கையின் முதல் ஆட்சியிலிருந்து இனப்பிரச்சினையின் அரசியற் பின்னணிகளைப் புரிந்து கொண்டுள்ளதுடன், 48ம் ஆண்டிற்குப் பின்னான ஜனநாயகப் போராட்ட காலகட்டங்களில் கூட வெளிவராத பல விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளார். உதாரணம், 1962களில் தோன்றிய ஓர் புலிப்படை.




புலிகளின் ஏனைய இயக்கங்கள் மீதான தாக்குதல், ஆயுதப்போராட்டத்தின் தோற்றம் - வளர்ச்சி, இயக்க உடைவுகள், போராளிகளின் மனோநிலை மாற்றங்கள், இந்திய - இலங்கை உடன்பாடு, பிரபாகரன் வரலாறு.... என பல பகுதிகளாக எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் விடுதலைப் போராட்டத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வெளிவராத பல விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளது.

## புத்தகத்திலிருந்து சில பகுதிகள்....

.... ஓர் கடுமையான பொறுப்பைச் செயற்படுத்த துணிவுடன் வந்திறங்கிய இந்திய அமைதிப்படையினர், புதிய தேசத்தைப் பார்ப்பதற்கு பலாலி முகாமை விட்டு வெளியே வந்தபோது சந்தோச மிகுதியான மக்கள் கூட்டத்தால் சூழப்பட்டனர்.

ஆரம்பத்திலிருந்த தயக்கங்கள், மொழித்தடைகளை ஓரங்கட்டிவிட்டு, போரால் சலிப்புற்றும், போர் அழிவுகளைச் சந்தித்தும் களைத்துவிட்ட தமிழ் மக்கள் அணைகடந்த வெள்ளமாக வெறித்தனமான ஆர்வத்துடன் கட்டியணைத்தும், முத்தமழை பொழிந்தும் தமது உணர்ச்சியினை வெளிக்காட்டினர். "ஒரு தடவை அவர்கள் ஆரம்பித்துவிட்டால், அவர்களை நிறுத்த முடியாது" அந்தளவிற்கு ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக் கொண்டு அமைதிப்படையினரைத் திக்குமுக்காட வைத்தனர் என்கிறார் முதலில் யாழ வந்திறங்கிய படை அதிகாரிகளில் ஒருவரான கப்டன் எஸ்.எஸ். சின்டே என்ற வீரர்.

ஏராளமான தமிழ் மக்கள் அமைதிப்படையினருக்கு மாலையிட்டு வரவேற்றனர். இன்னோர் பகுதியினர் இனிப்புகள் வழங்கியும், இளநீர் வழங்கியும் உபசரித்தனர். முதற்சுற்று பார்வையிடச் சென்ற இராணுவ ட்ரக்குகளின் பின்னால் சிறுவர்கள் சந்தோஷத்துடன் ஓடுவதும், ஒலிவ் பச்சை உடையுடனான வீரர்கட்கு மக்கள் கையசைத்து வாழ்த்துவதுமாக தமது வரவேற்பை வெளிப்படுத்தினர். "இந்த அமைதியை நம்பவே முடியவில்லை" என்று ஆச்சரியத்துடன் கூறுகிறார் ஊனம் என்ற இளைஞர். "சாதாரணமாக துப்பாக்கிக் குண்டுகளும் பீரங்கிக் குண்டுகளும் நாலாதிசையிலும் பறந்து திரியும்...."

பாதுகாப்புணர்வும் சந்தோஷ உணர்வும் எங்கும் தெரிந்தது. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை ஏற்றிவந்த இராணுவ வாகனங்களை நோக்கி 'எமக்கு மகிழ்ச்சி, எமக்கு மகிழ்ச்சி' என கையசைத்து ஆரவாரம் செய்தனர் மக்கள். அவர்களிடம் ஓர் விடுதலை இராணுவம் வந்திறங்கிவிட்டது என்ற தென்பு தெரிந்தது....

(பக்கம் 247)

.... யாழ்ப்பாணத்தில் புலிகள் மத்தியில் மனவெப்பியாரம் வளர்ந்தது. யாழ் குடாநாட்டின் சில பகுதிகள் தவிர புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்த பகுதிகளில் - தாம் வரித்த கொள்கைக்காக எந்த தியாகமும் செய்யாத - அந்நியப்படை தம்மை விட உயர்ந்தும், அதன்மூலம் மக்கள் மீதான தமது பிடியைக் கைப்பற்றியதும்தான் புலிகளின் எரிச்சலுக்குக் காரணமாகும். ஆனால் பரவலாக பெரும்பான்மை மக்களால் வரவேற்கப்பட்டுக் கொண்டிருக்கிற ஓர் அமைதி உடன்பாட்டுக்கெதிராக, உடன்பாடு ஏற்பட்ட உடனேயே கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் காட்டினால் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என அவர்கள் உணர்ந்தனர்.

இருந்தபோதும் புலிகள் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும், அமைதிப்படை வாகனங்களைத் தடுத்தும் தெருக்களில் அமர்ந்தும் பிரபாகரனை டெல்லியிலிருந்து அழைத்துவரக்கோரி தமது எதிர்ப்புக்களை காட்டத் தொடங்கினர். ஜூலை 31இல் யாழ் அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங்கின் காரின் பின்னால் கோபத்துடன் ஓடிய ஓர் கூட்டம் "எமக்கு பிரபாகரன் வேண்டும்" என கோஷமிட்டது....

(பக்கம் 248)

.... ஆகஸ்ட் 2ம் திகதி பிர்பாகரன் யாழ்ப்பாணத்திற்கு இந்தியன் விமானம் மூலம் வந்திறங்கினார். ஜூலை 24இல் அவரை எந்த இடத்தில் வைத்து அழைத்துச் சென்றார்களோ அதே இடமான சுதுமலைக்கு இந்தியப் படையினரின் ஜீப், ட்ரக் வண்டிக் காவலுடன் அழைத்துவரப்பட்டார். பிரபாகரனின் வரவையிட்டு புலிகள் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தனர். ஆனால் புலிகளுக்கு எரிச்சலூட்டுகின்ற வகையில் மக்கள் வீட்டு மதில்களுக்குள் நின்று இந்தியப் படையினர்க்கு கையசைத்து வாழ்த்து தெரிவித்தனர். சுதுமலையில் இந்தியப்படையினரிடம் இருந்து விடுபட்டு, பிரபாகரன் தமது சகாக்களுடன் சென்று மறைந்தார்....

(பக்கம் 249)

....உடன்படிக்கையும் ஆயுதக் கையளிப்பும் தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் ஆகஸ்ட் 4ம் திகதி சுதுமலையில் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்திற்கு தனது சிரேஷ்ட தோழர்கள் புடைசூழ வந்தார். வெளிநாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்தவர்களும் இந்தியப்படையினரும் பெருமளவில் இதனைப் பார்வையிடச் சென்றிருந்தனர். பிரபாகரன் இதில் பேசும்போது "ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமானது தமிழ் மக்களின் தலைகளைப் பந்தயப் பொருளாக வைத்துள்ளது. இந்த உடன்பாடானது திடீரென நம்மை நிராயுதபாணிகளாக்குகிறது...."- அவர் கடுமையானார், அவரது முகம் இறுகியது அவரது தொனி மொத்த விரக்தியை வெளிப்படுத்தியது. "எமது தலைவிதியை ஓர் வல்லரசு தீர்மானிக்கும்போது, அது எமது கட்டுப்பாட்டில் இல்லை நாம் என்ன செய்ய முடியும்?" கூட்டம் அவரது பேச்சை உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் எதிர்மாறாக, "நாங்கள் ஆயுதங்களைக் கையளிக்கப்போகிறோம்" என்று அறிவித்ததும் மக்கள் கூட்டம் கரகோசம் செய்து ஆரவாரித்தது. அக்கணத்தில் பிரபாகரன் முகத்தில் எரிச்சலும் சினமும் தோன்றியது. அவரது அதீத ஆவேச கருத்துக்களின்போது மக்கள் முகத்தில் உணர்ச்சியற்று உட்கார்ந்திருந்தனர்.

"இவ்வாயுதங்களை நாம் கையிலெடுத்ததும், பயன்படுத்துவதும் உங்களைப் பாதுகாப்பதற்காக, உங்கள் விடுதலைக்காக, உங்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதற்காக, நாம் இப்போது உங்களைக் காக்கும் பொறுப்பை இந்திய அரசிடம் விடுகிறோம். நாம் ஆயுதத்தை ஒப்படைக்காவிட்டால் இந்தியப்படையினருடன் கடும்துயரம் ஏற்படுத்தக் கூடிய சண்டைக்கே இட்டுச்செல்லும்.

நாம் அதை விரும்பவில்லை, நாம் இந்தியாவை நேசிக்கிறோம்; இந்திய மக்களை நேசிக்கிறோம்? எமது ஆயுதங்களை இந்திய இராணுவத்திற்கெதிராகத் திருப்புவது என்ற சந்தேகத்திற்கே இடமில்லை. ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி ஒன்றை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தமிழீழம் என்ற இலக்கை அடைய நான் தொடர்ந்து போராடுவேன். விடுதலைப்புலிகளின் குறிக்கோள் தமிழீழத் தாயகமே"....

(பக்கம் 251)

......புழுங்கிக் கொண்டிருக்கும் பதற்றத்தைச் சட்டை செய்யாமல் இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் இந்தியா இறங்கியது. 87 முடிவில் மாகாண அரசுக்கான தேர்தல் நடத்தப்படும்வரை ஓர் இடைக்கால அரசை அமைத்து அதன்மூலம் நிர்வாகத்தை நடத்துவதே திட்டமாக இருந்தது. இந்திய அரசியல் சட்ட குழு ஒன்று என்னென்ன அதிகாரங்களை எப்படிப் பகிர்வது என்பது பற்றிப் பேச கொழும்பு வந்தது. இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசின் திட்டப்படி இடைக்கால அரசில் த.வி.கூ, எல்.ரி.ரி.ஈ, ஈரோஸ், முஸ்லீம் ஆகியோருக்குத் தலா 2 பிரதிநிதிகளும் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் ஆகியவற்றிற்கு தலா ஒரு பிரதிநிதியும் என்ற அடிப்படையில் கவுன்சில் அமைப்பது. இதற்கு, பிரபலமான தமிழ் சிங்கள அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைப்பது - தேர்தலில் மக்களால் தெரியப்படும்வரை நிர்வாகத்தில் எல்லா இயக்களுக்கும் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது....

.... அமைதியைக் குழப்ப முனையும் புலிகளின் நடவடிக்கைகளையும் மீறி யாழ் மக்கள் அமைதிப்படை மீது அனுசரணையாகவும் அன்பாகவும் இருந்தார்கள். ஆகஸ்ட் 12இல் இரண்டு ஐ.பி.கே.எ.ப் இனர் புலிகளால் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும்போது கண்ணிவெடியில் மிதித்ததால் சிதறுண்டு இறந்தனர். உடனடியாக யாழ் வியாபாரிகள் சங்கம் எல்லாக்கடைகளிலும் கறுப்புக்கொடி பறக்கவிட்டு அஞ்சலி செய்யும்படி கேட்டுக்கொண்டது. செய்தி பரவியதும் மக்கள் உண்மையில் மிகத் துயரமடைந்தனர். ஆனால் வியாபாரிகள் சங்கம் இறந்த படையினரின் குடும்பங்கட்கு கொடுக்கவென பணம் சேர்த்த போது புலிகள் தலையிட்டு இரகசியமாக ஆனால் கண்டிப்பாக திட்டத்தைக் கைவிடும்படி உத்தரவிட்டனர்....

(பக்கம் 254)

....பதற்றச் சூழ்நிலை அதிகரித்தது. இந்தியப்படையினருடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என புலிகள் மக்கள் மத்தியில் கடும் எச்சரிக்கை செய்து வருவதாக பலர் படையினரிடம் கூறினர்....

....பிரபாகரன் தனக்கு உடன்படிக்கை மீது நம்பிக்கை இல்லை என்றும், இந்தியப்படையை சகதிக்குள் தள்ளுவேன் என்பதையும் உறுதியுடன் தெளிவுபடுத்தினார்.

'சற்றடே றிவியூ' ஆசிரியர் ஒருவர் தற்செயலாக பிரபாகரனையும் மாத்தையாவையும் யாழ் பல்கலைக்கழகம் அருகே சந்தித்தபோது பிரபாகரன் சொன்னார், "அப்படியானால் நான் உடன்படிக்கையை ஆதரிப்பதாக நினைக்கிறீர்களா? அதை நான் விரும்பவில்லை. முதல் சந்தர்ப்பத்தில் அதனைச் சீர்குலைப்போம்" இதேபோன்றே பிரபாகரன் வெளிப்படையாகவே ஓர் இந்தியப் பத்திரிகையாளருக்கும் சொன்னார். இந்திய இராணுவ இயந்திரத்தை எதிர்ப்பதற்கு எப்படி "அரசியல் விளையாட்டு" காட்டப்போகிறேன் என விலாவாரியாக விபரித்தார்.

தொடர்ச்சி.... பக்கம் 7

படிப்பகம்

www.padippakam.com







# சமாதானம்

## ஆம்! ஜனநாயகத்துடன்!!

09.12.94 அன்று கொழும்பில் யுத்தத்திற்கெதிராகவும், சமாதானத்தை வலியுறுத்தியும், இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்குமாறு கோரியும் சமாதானப் பேரணி ஒன்று நடைபெற்றது. பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், அரசுசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், ஜனநாயக அரசியல் கட்சிகள் யாவும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இப்பேரணி முடிவில் விகாரமாதேவி பூங்காவில் பொதுக்கூட்டம் நடந்தது.

பேராசிரியர் சுமணசிறீ லியனகே, பத்திரிகையாளர் மனோரஞ்சன், சுனந்த தேசப்பிரிய, நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த ச.பாலகிருஷ்ணன், பெண்கள் அமைப்பைச் சேர்ந்த அனீற்றா பெர்னாண்டோ, வாசுதேவ நாணயக்கார எம்.பி. போன்ற பலர் உரையாற்றினர்.

கூட்ட முடிவில் இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தனித்தனியே விடுக்கப்படும் வேண்டுகோள்கள் எழுதி வாசிக்கப்பட்டு பொதுமக்கள் அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. வேண்டுகோள்கள் கொண்ட மகஜர்களை அரசுக்கும், புலிகளுக்கும் அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டது.

### அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில்–

இந் நாட்டு மக்கள் கடந்த ஒன்றரை தசாப்தங்களாக இனங்களுக்கிடையே அமைதியும் ஜனநாயக வழிமுறைகளும் சீர்குலைந்துபோன நிலைமையை அனுபவித்து வந்துள்ளார்கள். இதன் பாதிப்பின் காரணமாக மாற்றத்தை விரும்பிய சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கி மக்கள் தமது வாக்குரிமையை முன்னொருபோதுமில்லாதவாறு பாவித்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அதிகாரத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இந்த மக்கள் ஆணையானது அரசாங்கத்திற்கு சமாதானத்தையும் ஜனநாயக நடைமுறைகளையும் மீண்டும் நிர்ணயிப்பதற்கான பொறுப்பை வலியுறுத்தியுள்ளது.

நாம் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கும் அதேசமயம் மேற்கொண்டும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறோம்.

1. அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பாக எழக்கூடிய சந்தேகங்கள் யாவற்றையும் அகற்றும் விதத்தில், சமாதானத்திற்கான அதன் முழுமையான ஈடுபாட்டைத் தெரிவித்து, அத்துடன் இம்முயற்சிகள் எந்தத் தடைகளாலும் தடுக்கப்படவோ குழப்பப்படவோ அனுமதிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும்.
2. அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, தாம் அமுலாக்கத் தயாராக உள்ள அரசியல் தீர்வின் அம்சங்களை தாமதிக்காது முன்வைக்க வேண்டுமெனவும் நாம் விரும்புகின்றோம்.

இத்தீர்வானது தமிழ் முஸ்லீம் மக்களின் நியாயமான அபிலாசைகளையும், சகல குடிமக்களும் தம் ஜனநாயக உரிமைகளைப் பூரணமாக அனுபவிக்கும் உத்தரவாதத்தையும் கருத்திற்கெடுத்துக் கொண்டதாக இருக்கவேண்டும்.... என்று கேட்கப்பட்டிருப்பதோடு,

பேச்சுவார்த்தைகள் மூலம் யுத்த நடவடிக்கைகளுக்கு முடிவுகாண முனையும்போது, சிறுபான்மை மக்களின் பாரிய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளவும், இலகுவான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளவும் கூடிய வேறுபல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தபடி, அத்தியாவசியத் தேவைகளின் பற்றாக்குறையோடு வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சீர்செய்யுமுகமாக செய்யவேண்டிய உடன்டி நடவடிக்கைகள் பற்றியும்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், அவசரகாலச்சட்டத்தின் கீழும் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள வழக்குத் தாக்கல் செய்யப்படாத அல்லது சட்டத்தின்முன் நிறுத்தப்படாத நபர்கள் விடுதலைசெய்யப்படல் வேண்டுமெனவும் பல்வேறு கோரிக்கைகள் அம்மகஜரில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் என்ற வகையில் மேற்கண்ட இந்த முன்மொழிவுகளை அரசிற்குச் சமர்ப்பிப்பதுடன் ஜனநாயகத்துடன் கூடிய சமாதானத்தை எய்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு வேண்டுகோள்

இந்த யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கின் பெரும்பகுதி நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ள ஒரு பிரதான பகுதியினராக உருவெடுத்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானமான அரசியல் தீர்வொன்றிற்குத் தாம் தயாரென அண்மையில் வெளியிட்டிருக்கும் பகிரங்க அறிக்கைகள் வடபகுதி மக்களால் பெருவாரியாக வரவேற்கப்பட்டன.

அவர்களது சமாதானத்திற்கான ஈடுபாட்டை உறுதிசெய்யுமுகமாகவும், மக்களது சமாதானத்திற்கான அபிலாஷைகளை நிறைவுசெய்யுமுகமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நாம் முன்மொழிகிறோம்.

1. பொருத்தமான சமாதானத்திட்டமெனத் தாம் கருதும் ஜனநாயக அரசியல் வடிவமைப்பினை தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கப்படுத்தல் வேண்டும்.
2. அவர்கள் சமாதானப்பாதைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எந்தவொரு செயற்பாட்டையும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.
3. யுத்தத்தின் கொடூரங்களை அகற்றுமுகமாகவும் சமாதானத்தை நோக்கிய செயற்பாட்டை வலியுறுத்துமுகமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் –
   - அ) தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள், பணயக்கைதிகள், மற்றும் பாதுகாப்புப் படையினர் சகலரையும் விடுதலை செய்தல் வேண்டும்.
   - ஆ) தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வாழுவோரை சமாதானச் செயற்பாடுமீது தமது சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்தவும், இவ்வடிப்படையில் தடையின்றிக் கூட்டாகச் செயற்படவும் அனுமதித்தல் வேண்டும்.
   - இ) அரசும் மற்றைய ஸ்தாபனங்களும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பு சாதனம், மின்சாரம் போன்ற வசதிகளை சுதந்திரமாக மீளமைப்பதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.
4. அத்தோடு மக்கள்மீது யுத்தத்தின் பாரதூரமான தாக்கங்களைக் குறைக்குமுகமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.
   - அ) குடிமக்களுக்காக வழங்கப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விநியோகத்திற்கு எத்தகைய இடையூறும் விளைவிக்காதிருப்பதாக உறுதிப்படுத்தல் வேண்டும்.
   - ஆ) உள்நாட்டு ஆயுதமோதல்கள் பற்றிய ஜெனீவா ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு மதிப்பளித்து அமுலாக்கல் வேண்டும்.
   - இ) வட – கிழக்கு பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தேசிய, சர்வதேசிய அரசாங்க நிறுவனங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்தல் வேண்டும்.
5. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் மனசாட்சிச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், அணிதிரளும் சுதந்திரம், இயங்கும் சுதந்திரம் ஆகிய அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து, இவற்றை இம்மக்கள் அனுபவிக்கக்கூடிய சூழ்நிலையை உறுதிப்படுத்தல் வேண்டும்.
6. தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் நிராயுதபாணியான மக்கள் கூட்டமாகக் கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு சுதந்திரமான ஸ்தாபனங்களுக்குள்ள உரிமையை அங்கீகரித்து அனுமதிக்க வேண்டும்.
7. மரணதண்டனையும் அதன் அமுலாக்கமும் நிறுத்தப்படல் வேண்டும்.
8. வட–கிழக்கு பகுதிகளிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட முஸ்லீம் மக்கள் திரும்பிவந்து குடியேற அனுமதிக்கப்பட்டு அவர்களது பாதுகாப்பும் உறுதிசெய்யப்படல் வேண்டும்.
9. பிராயமாகாத சிறுவர்களை இராணுவ நடவடிக்கைகளுக்குச் சேர்ப்பதும் ஈடுபடுத்துவதும் நிறுத்தப்படல் வேண்டும். இவ்வாறு தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் அனைவரும் பொதுவாழ்கைக்குத் திருப்பி அனுப்பப்படல் வேண்டும்.
10. இனப்பிரச்சினையின் தீர்வு ஈட்டப்பட்டபின் வட–கிழக்குப் பிரதேசங்களில் முஸ்லீம், சிங்கள மக்கள் சுயமாகத் தங்கியிருந்து தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்ளுவதற்குள்ள உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

நாம், சமாதானத்திற்காக ஈடுபாட்டுடன் செயற்படும் பொதுமக்கள் என்ற வகையில் மேற்கண்ட இந்த முன்மொழிவுகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிப்பதுடன் ஜனநாயகத்துடன்கூடிய சமாதானத்தை எய்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் நாம் இலங்கையின் சகல குடிமக்களுக்கும் சமாதான செயற்பாட்டிற்கான அவர்களது அதிகபட்ச ஆதரவை வழங்கும்படி அழைப்பு விடுக்கின்றோம்.







படிப்பகம்

www.padippakam.com



# பாதை

ஆடு மாடுகளைப் போல அன்றாடம் ஒரு ஊர்வலம். இது தமிழ் மக்களின் விதியாகப் போய்விட்டது. குண்டுவீச்சுக் களினுள் கிளாலிக்கடலினூடாக படகில் நெரிந்துகொண்டு பயணம். அதிர்ஷ்டம் உள்ளவர்கள் கரைசேருவர், இல்லாதவர்கள் கடலில் சங்கமமாகிவிடுவார்கள்.

இது தமிழர்களின் அன்றாட வாழ்வில் பிரிக்க முடியாத ஒருபகுதி. ஆம் கடந்த 4 வருடங்களில் தமிழர்கள் அனுபவித்த அவலம் இது.

ஒருவாறு கரைசேர்ந்தால் சைக்கிளிலும் ட்ரக்டர்களிலும், மாட்டு வண்டிகளிலும் வவுனியாவிற்கு பயணம். தாண்டிக்குளம் மனிதர்கள் இல்லாத பகுதியில் (No man area) எங்கிருந்து செல் வரும் என்று சொல்ல மடியாது. மக்கள் சிதறி ஓடுவர்.

சோதனைச் சாவடியில் தரம்பிரிப்பு. பொருட்களல்ல, மனிதர்கள். கைவிரல் அடையாளம், படப்பிடிப்பு, விசாரணை எனத் தொடரும்.

**"யுத்தம்புரியும் தரப்புக்களிடம் சாதாரண மக்களின் முக்கிய வேண்டுதல் ஒன்று இருக்கிறது, அதுதான் உயிர் வாழ்வு. யுத்தம் புரிய வேண்டும் என்று நினைப்பவர்கள் சாதாரண மக்களின் உயிர்வாழ்க்கை பற்றிச் சிந்திக்காவிட்டால் யுத்தம் யுத்தத்துக்காக அல்லது யுத்தம் புரிபவர்களின் நலன்களுக்கு மாத்திரம்தான் என்றாகிறது."**

அவற்றையெல்லாம் தாண்டி ரயில் நிலையத்தில் முண்டியடிப்பு. பெரியதடியுடன் பொலிஸ்காரரர். துரத்துவது, ஓடுவது, திரும்புவது, ஒருவர்மேல் ஒருவர் விழுவது. திரும்ப ரயிலில் "செக்கிங்". கொழும்புக்கு ஏன் போகிறாய்? இந்த நாட்டுப் பிரஜையிடம் பொலிசும், இராணுவமும் இந்தக் கேள்வியைக் கேட்கும்.

சந்தேகத்தில் 25–30 பெண்களும், இளைஞர்களும் கைது. நாலைந்து பொலிஸ் நிலையங்களில் பிரித்து அடைத்து வைப்பு.

இங்கு மனித உரிமைகள் இந்த லட்சணத்தில்தான் பாதுகாக்கப்படுகிறது. ஒவ்வொரு நிகழ்விலும் 'நீ சந்தேகப் பேர்வழி' என்ற முத்திரை குத்தப்படுகிறது.

17வருட கொடுங்கோன்மை முடிந்ததென்று பார்த்தால் இப்போதும் தொடர்கிறது இந்தக் கொடூர அவலம்.

பாப்பரசர் தைமாதம் கொழும்பு வருகிறார். தரிசிக்க விரும்புபவர்கள் எவ்வாறு கொழும்பு வருவது? அங்கு அதிகாரம் செய்வோர் எத்தனை பேருக்கு அனுமதி வழங்குவார்கள்? வழங்கினாலும் எந்தப் பாதையால் வருவது? ஆனையிறவைத் திறக்கத்தயார் என்று அரசு அறிவிப்பு. புலிகள் தயக்கம்.

என்னதான் சமாதானம் என வாய் கிழியக் கத்தினாலும் சாதாரண மனிதர்கள் பிரயாணம் செய்யப் பாதையை உருவாக்குவதென்பது இங்கு பிரச்சினையாகத்தான் இருக்கிறது.

பாப்பரசரின் வருகையோடாவது பாதை திறவாதா?... என மக்கள் ஏங்கி நிற்கிறார்கள். அரசின் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் பாதை திறப்பு, ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளை நிறுத்தல் என்ற இரண்டு விடயங்கள் இருக்கின்றன.

பேச்சுவார்த்தை 'பாதை திறப்பு' என்ற நற்செய்தியை முதலில் கொண்டு வர வேண்டும் என்பதே எல்லோரதும் ஆசை. நடக்குமா என்டதுதான் கேள்விக்குறி.

யுத்தம்புரியும் தரப்புக்களிடம் சாதாரண மக்களின் முக்கிய வேண்டுதல் ஒன்று இருக்கிறது அதுதான்– உயிர் வாழ்வு. யுத்தம் புரிய வேண்டும் என்று நினைப்பவர்கள் சாதாரண மக்களின் உயிர்வாழ்க்கைபற்றிச் சிந்திக்காவிட்டால் யுத்தம் யுத்தத்துக்காக அல்லது யுத்தம் புரிபவர்களின் நலன்களுக்கு மாத்திரம் தான் என்றாகிறது.

யுத்தம் மனிதர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கென்றால் வேறு. யுத்தம் மரணிப்பதற்காக – அழிவுக்காக என்றிருந்தால் அது எதிர்க்கப்பட .வேண்டும், வெறுக்கப்பட வேண்டும். மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை என்றால் அது கருத்திற் கெடுக்கப்பட்டாக வேண்டும்.

மக்கள் அன்றாடம் போக்குவரத்து செய்வதற்கான பாதையில் கெடுபிடியை நிறுத்த முடியாவிட்டால் சமாதானப் பாதையை எவ்வாறு உருவாக்க முடியும்.

எனவே முதலில் அச்சமின்றி பயணிக்க ஒரு பாதையைக் காண்போம். மனங்கொள்வார்களா?

– ஒரு வாசகன், கொழும்பு–13.

## குறுக்கெழுத்துப் போட்டி–9

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | | 5 | | ■ |
| | ■ | 6 | | ■ | | ■ | | ■ | 7 |
| 8 | 9 | | | 10 | | 11 | | | |
| ■ | 12 | | ■ | 13 | | | | ■ | |
| 14 | ■ | ■ | 15 | | | | | 16 | |
| 17 | | 18 | | | ■ | 19 | | | ■ |
| | ■ | 20 | | | 21 | ■ | ■ | 22 | |
| ■ | 23 | | | ■ | 24 | 25 | | | ■ |
| 26 | | | | ■ | ■ | | ■ | ■ | 27 |
| 28 | | ■ | 29 | | | | | | |

### இடமிருந்து வலம்

1. புலிகள் குற்றம் சுமத்தியதால் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இவர் இல்லை.
6. பிரி.
8. 'மன்மதலீலையை வென்றாருண்டோ' நடிகர்.
12. எல்லாப் பாதைகளும் இந்த நகரை நோக்கி.
13. திரும்பவும்.
15. காட்டு விலங்கொன்று தலைகீழாக.
17. ரம்மி, கழுதை, 304 வரிசையில் இந்தியக் கிராமங்களில் பிரபலமான விளையாட்டு.
19. ஒவ்வொரு எழுத்தாகப் பார்த்தால் புதுசில் உண்டு பழசில் இல்லை; குடத்தில் உண்டு குவளையில் இல்லை; அறுவையில் உண்டு அலட்டலில் இல்லை. மொத்தத்தில் பெண்ணிடமுண்டு ஆணிடமில்லை.
20. பங்கீடு.
22. எண்சாணில் இந்தச் சாணே பிரதானமானது.
23. பிரானுக்கே பிரம்படி வாங்கிக் கொடுத்தவள். (தலைகீழ்)
24. நண்பன்.
26. மக்கள் சமாதானத்தை ---- விரும்புகிறார்கள்.
28. கல்லாதவர் முகத்தில்--. (தலைகீழ்)
29. இம்மாநாடு தஞ்சையில் நடக்கிறது.

### மேலிருந்து கீழ்

1. யானை போடுவது.
2. சாதனை. குழம்பியிருக்கிறது.
3. ராஜீவின் புதல்வர். (தலைகீழ்)
4. சிறந்த குணநலன்களைப் பெற்றிருப்பவர். (தலைகீழ்)
5. புதைகுழிகளைத் தோண்டத் தோண்டத் தெரிந்தது முந்திய அரசின்-----. (குழம்பி)
7. அனுபவ நிறைவு. (தலைகீழ்)
9. தெரியாத நபர்.
10. நிலச்சுவான்தார்.
11. பசு தரும் முதற்பால்.
14. தடாகப்பூ.
15. ஒரு மதம். தூய தமிழில் குழம்பியிருக்கிறது.
16. ஒத்திப்போடு. (குழம்பி)
18. பாதுகாப்பு.
21. குயிலைப்போல --. (தலைகீழ்)
23. மாற்று வடிவம்.
25. காந்தி சுற்றியது குழம்பிவிட்டது.
26. அரிவை.
27. பத்துப் பேரும் பறக்க வருபவர்.

### கு.எ.போட்டி–8 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. கார்த்திகேயன் | 1. காமினிஅத்துக்கோறள |
| 6. சாமி | 2. சார் |
| 7. விசில் | 3. தித்திப்பு |
| 9. சதிபதி | 4. யந்திரம் |
| 11. வத்தி | 5. நல்வரவு |
| 12. அந்தப்புரம் | 7. விதி |
| 14. தார(கை) | 8. சித்தார்த்தன் |
| 15. புலம்பெயர்வு | 9. சத(ம்) |
| 16. துரோகி | 10. புலம்பல் |
| 18. ரசம் | 13. பெட்டகம் |
| 20. தனு | 17. கிரகணம் |
| 21. கோமகன் | 19. சன் |
| 22. குட்டான் | 22. குமிண் |
| 23. உமி | 23. உட(ல்) |
| 25. நீராழிமண்டபம் | 24. நீறு |

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**எம்.எஸ். ஜெயவீரரெத்தினம், சிறீலங்கா ரெலிகொம், மட்டக்களப்பு.**

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. திருமதி க. கமலாம்பிகை, 13, கரப்பன்காடு, வவுனியா.
2. கே. டிரோஜன், 103, எல்லை வீதி, மட்டக்களப்பு.
3. திருமதி எஸ். சிவசுந்தரம், 198, கோவிலடி, மஸ்கெலியா.
4. எஸ். விநாயகம், கோறளை ப.நோ.கூ.ச, வாழைச்சேனை.
5. வி. மதிவதனி, விபுலானந்தா வீதி, வாழைச்சேனை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 25ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம், த.பெ.இல: 442, கொழும்பு.**

## யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.
ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய் உடைந்துவிழும்
மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.
நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்து
ஒரு தனித் துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைக்கதைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது.
எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங்கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போனார்கள்.
அதன்பின்னர் படலையை நேரத்துடன்
சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை
இனம்காணவும்
கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள் போல எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்.
தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.
யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள் "வளர்ந்தவர்" ஆயினர்.

-சிவரமணி



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(புளொட் அரசியல் பிரிவு)யின் உபதலைவரான கரவை ஏ.சி.கந்தசாமி, கடந்த ஆண்டின் கடைசி நாளன்று அவரது தெகிவளை இல்லத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தப் படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதோடு, இத்தகைய அரசியல் பழிவாங்கல் படுகொலைகளை தடுத்து நிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் வலியுறுத்துகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்